Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 284

ஞாயிற்றுக்கிழமை
07 செப்ரெம்பர் 2025

ஆவணி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## உரும்பிராயில் விபத்து ஒருவருக்குப் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 7
கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பலாலி வீதி, உரும்பி ராய் பகுதியில் நேற்று இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படு காயம் அடைந்துள்ளார். மோட்டார்சைக்கிள் மற்றும் கார் என் 15



# ஜெனிவா அமர்வு நாளை ஆரம்பம்!

கொழும்பு, செப்ரெம்பர் 7

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.** 14

## உடையார்கட்டில் விபத்து; இளைஞர் பரிதாபச் சாவு!

முல்லைத்தீவு, செப். 7
புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடை யார்கட்டுப் பகுதியில் நேற்று இரவு இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் 14

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக பொதுமக்கள் நேற்றுப் போர்!

### இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக, நேற்றுப் பொதுமக்கள் திரண்டு போராட்டத் 14

செம்மணி மனிதப் புதைகுழி

## இரண்டாம்கட்ட அகழ்வுகளில் 239 என்புத்தொகுதிகள் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 7
அரியாலை - செம்மணி மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டுவந்த இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறை வுக்கு வந்த நிலையில், 15

**முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு!**
விரிவு பக்கம்:- 14

செம்மணியில் இன்று

## கிருஷாந்தியின் நினைவேந்தல்!

### நூல் வெளியிடவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 7
ஸ்ரீலங்கா இராணுவத் தால் கடத்தப்பட்டு, வன்பு ணர்வுக்கு உட்படுத்தப்பட் டுக் கொல்லப்பட்ட கிரு ஷாந்தி குமாரசாமியின் நினைவேந்தல் நிகழ்வு செம்மணி வளைவுப் பகுதி யில் இன்று முன்னெடுக் 14




## அவதானிக்கப்பட்ட பின்னும் மீட்கப்படாத என்புத்தொகுதி

### கோர்வையாக இருப்பதே காரணம்

யாழ்ப்பாணம், செப். 7
செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து அவ தானிக்கப்பட்ட என்புத்தொகுதியொன்று, மீட் கப்படாத நிலையில் அகழ்வுப் பணிகள் நேற் றுத் தற்காலிகமாக முடிவுக்குவந் தன. 14

## செம்மணி வழக்கில் பெரும் எதிர்பார்ப்பு!

யாழ்ப்பாணம், செப். 7
செம்மணிப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந் துள்ள நிலையில், நீதிமன்ற நடவடிக் கைகள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.
செம்மணிப் புதைகுழி 14



## பக்த வெள்ளத்தில் சந்நிதியானின் தேர்

யாழ்ப்பாணம், செப். 7
'அன்னதானக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா நேற்றுச் சனிக்கிழமை பல்லாயிரம் பக்தர்களுக்கு மத்தியில் மிகவும் 14

**முச்சந்தி முரளி**

'கோயில் திருவிழாக்கள் முடிய இனி ஜெனிவாவில கொடியேறுது கண்டியளோ'

## வெற்றுக்காணிக்குள் ஆணின் சடலம்!

### கொக்குவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்ப்பாணம் கொக்குவில் கல்வாரி தேவாலயத்துக்கு அருகிலுள்ள வெற்றுக்காணிக்குள் இருந்து ஆணொ ருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சிவசாமி தனபாலசுந்தரம் (வயது - 62) 14

**சஞ்சீவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ... தமிழ் நாளிதழ்

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 06.09.2025 | 4186 | O | 09 21 29 57 | விசேட எழுத்து O |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 06.09.2025 | 1253 | | 14 37 39 59 | வெற்றி இலக்கினம் மிதுனம் |
| NLB ஜய | 06.09.2025 | 0212 | A | 6 7 2 6 | |
| மெகா பவர் | 06.09.2025 | 2292 | B | 24 38 43 63 | சுப்பர் இலக்கம் 17 |
| மஹஜன சம்பத | 06.09.2025 | 5944 | U | 6 1 0 6 3 5 | |
| தன நிதானய | 06.09.2025 | 1974 | S | 12 39 48 56 | விசேட எழுத்து S |
| அத சம்பத | 06.09.2025 | 0519 | U | 0 6 3 5 | |
| சுப தவசக் | 06.09.2025 | 0060 | | 27 33 38 46 | வெற்றி இலக்கினம் கும்பம் |

# மின்சாரசபை மறுசீரமைப்பு அரசாங்கம் தன்னிச்சை

அஜித் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு,செப்.7**
**இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்புச் செய்யும் விடயத்தில் அரசாங்கம் தன்னிச்சையாகச் செயற்படுகின்றது. இந்த விடயத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மின்சாரசபை ஏனைய அரச நிறுவனங்களை விட அதிக இலாபமீட்டும் நிறுவனமாகும். ஆனால் அரசாங்கம் அதன் பணியாளர்கள் பாதிக்கப்படும் வகையில் தீர்மானங்களை எடுத்துள்ளது. இவ்வாறு தன்னிச்சையாகத் தீர்மானங்களை எடுக்காது, பணியாளர்களுடன் கலந்துரையாடித் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அன்று மின்சாரசபையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பை வெளியிட்ட ஜே.வி.பி தொழிற்சங்கங்கள், இன்று அனைத்து அங்கத்தவர்களையும் கைவிட்டுத் தன்னிச்சையான தீர்மானங்களை எடுத்துள்ளது. மாற்றங்கள் நியாயமானவையாக இருக்கவேண்டும். வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்படவேண்டும். நாட்டுக்கு உகந்தவையாக இருக்கவேண்டும். இதனை வலியுறுத்துவதற்காகவே மின்சாரசபை ஊழியர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் அவர்களின் குரலை செவிமடுக்க வேண்டும்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 06.09.2025 | |
| தினம் | சனிக்கிழமை | |
| வெற்றி வாரம் | 0652 | |
| ஆங்கில எழுத்து | T | |
| வெற்றி இலக்கம் | 1 4 9 7 1 1 | |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 06.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2918 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 15 47 62 79 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 06.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 03 31 33 67 |
| வெற்றி வாரம் | 5079 |


| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 06.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0764 |
| வெற்றி இலக்கம் | 25 41 44 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 06.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| மேஷம் | ♈ |
| வெற்றி இலக்கம் | 15 48 57 61 |
| சீட்டிழுப்பு வாரம் | 4630 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 06.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 13 29 38 72 |
| வெற்றி வாரம் | 2094 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 06.09.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 23 28 40 45 |
| வெற்றி வாரம் | 2744 |

## மீன் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்



கொழும்பு,செப்.7
மீன்வள இழப்பைத் தடுக்கவும், உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.
கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குச் சத்தான உணவை வழங்குவதில் நன்னீர் மீன் வளர்ப்பு பிரதான பங்குவகிக்கிறது.
அதன்படி இரண்டு ஆண்டுகளில் 250 நிரந்தர நன்னீர் நீர்த்தேக்கங்களில் தடுப்புவலைகளை நிறுவும் திட்டத்துக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

பாலியல் துஷ்பிரயோகம்;
## சகோதரர்கள் இருவருக்கு 7 வருடக் கடுழியச்சிறை

மன்னார், செப்.7
சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு வழக்கில் சகோதரர்கள் இருவருக்கு 7 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
குற்றத்தின் பாரதூர தன்மை, மற்றும் இத்தகைய குற்றங்கள் மேலும் இடம்பெறாமல் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 7 வருடக் கடுழியச்சிறைத்தண்டனைக்கு மேலதிகமாகத் தண்டப்பணமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈட்டுத்தொகையும் வழங்கத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-213)



முதன்முறையாக
## பிரதிப்பொலிஸ்மா அதிபர்களாக நான்கு பெண்கள் நியமனம்




கொழும்பு,செப்.7
இலங்கைப் பொலிஸ் வரலாற்றில் முதன்முறையாக, நான்கு பெண்கள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்தப் பதவி உயர்வுகளை வழங்கியுள்ளார்.
இதன்படி, தர்ஷிகா குமாரி, பத்மினி வீரசூரிய, ரேணுகா ஜயசுந்தர மற்றும் நிஷானி செனவிரத்ன ஆகியோர் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவியேற்கவுள்ளனர்.
இவர்களில் மூவர் 1997ஆம் ஆண்டு பயிற்சி உபபொலிஸ் பரிசோதகர்களாக இலங்கைப் பொலிஸ் சேவையில் இணைந்தனர்.
நியமிக்கப்பட்ட இந்த நான்கு பெண் பொலிஸ் அதிகாரிகளில், தர்ஷிகா குமாரி தற்போது பொலிஸ் களப்படைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிவருகிறார். மூத்த அதிகாரியான நிஷானி செனவிரத்ன, அரச புலனாய்வுச் சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர் ஆவார். (ச-இ)

கடந்த 8 மாதங்களில்
## புதிய வாகனங்கள் ஒரு இலட்சம் பதிவு

கொழும்பு, செப்.7
கடந்த 8 மாதங்களில் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 586 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இவற்றில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 745 மோட்டார் சைக்கிள்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
வாகன எண் தகடுகள் அச்சிடுதல் ஆறு மாதங்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டதால், இந்தப் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு எண் தகடுகள் கிடைக்கவில்லை.
அத்துடன் வாகன எண் தகடுகளைத் தயாரிக்கும் வணிகங்களின் கட்டணங்களும் பெருமளவில் அதிகரித்துள்ளன என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



## நீரில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, செப்.7
விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு நீராடச்சென்ற பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
நுகவெல பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேல் மாகாணத்தில் அடுத்தடுத்து 4 துப்பாக்கிச்சூடுகள்

## தப்பியோடிய துப்பாக்கிதாரிகள்

**கொழும்பு, செப்.7**
**கொழும்பில் நேற்றுமுன்தினம் மற்றும் நேற்று அதிகாலை தனித்தனியான துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் 4 பதிவாகியுள்ளன.**

நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில், கிராண்ட்பாஸ் மஹாவத்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள், ரிவோல்வர் துப்பாக்கியால் ஒருவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்று அதிகாலை 1.40 மணியளவில், மருதானைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தயில் வங்கியொன்றுக்கு முன்பாக, இரண்டு ஆயுததாரிகள் ஒருவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச்சம்பவத்தில்காயமடைந்தநபர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் சிகிச்சை பெற்று வருகிறார். அதேவேளை நேற்றுக் காலை பாணந்துறை சந்தகலவத்த பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றின்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.
அத்துடன் நீர்கொழும்பு, குட்டுதுவப் பகுதியிலும் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் சந்தேகநபர்கள் தப்பிச் சென்ற நிலையில் அவர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)


# நடப்பாண்டில் 96 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு,செப்.7
நடப்பாண்டில் இதுவரையில் 96 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ்தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 50 பேர் உயிரிழந்துள்ளனர், 53 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

உடைமையில் கஞ்சா;

# மன்னாரில் இருவருக்கு கடூழியச்சிறை

மன்னார், செப்.7
மன்னார்ப்பிரதேசத்தில்183கிலோ கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.
வழக்கு விசாரணைகளில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.
முதலாம் குற்றவாளிக்கு இரண்டு குற்றச்சாட்டுகளுக்குத் தலா 4 வருட கால அடிப்படையில் 8 வருட சிறைத்தண்டனையும் தண்டப் பணமும் இரண்டாம் குற்றவாளிக்கு இரண்டு குற்றச்சாட்டுகளுக்குத் தலா 2 வருட கால அடிப்படையில் 4 வருட சிறைத் தண்ட னையும், தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. (ச-213)



# இன்று தென்படவுள்ள அரிய சந்திரகிரகணம்

கொழும்பு,செப்.7
அரியவகை முழுச் சந்திரகிரகணம் இன்று வானில் தென்படவுள்ளது.
இரத்த நிலவு என்று அழைக்கப்படும் இந்த கிரகணம், இந்த ஆண்டின் கடைசி முழுச் சந்திரகிரகணமாகும். இந்த முழுக் கிரகணம் மாலை 18:30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7:52 வரை 82 நிமிடங்கள் நீடிக்கும்.
பூமியின் நிழல் சந்திரனை முழுவதுமாக மறைப்பதால் இந்த அரிய நிகழ்வு நிகழ்கிறது. சூரிய ஒளி வளிமண்டலத்தின் வழியாகப் படிந்து, அதற்கு ஒரு சிவப்பு நிற ஒளியைக் கொடுக்கும்.
இந்தக் காட்சியை உலக மக்கள் தொகையில் சுமார் 85 சதவீதத்தினர் அவதானிக்க முடியும் என்றும் ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் தெளிவாக அவதானிக்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## புலமைப்பரிசில் பெறுபேறுகள்

**நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்**
ம. மதுமிதா 134

**மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்**
ந. சகாஸ்ரா 156, த. தக்சிகா 142, த. கவிஸ்னா 137, சி. சுவதிகன் 135. (9)

# சந்நிதியில் வாகனப் பாதுகாப்புக்கு அதிகரித்த கட்டணம் வசூலிப்பு!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,செப்7
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள வாகனப் பாதுகாப்பு நிலையத்தில், அதிகரித்த கட்டணம் அறிவிடப்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இடம்பெற்று வரும் நிலையில், தொண்டைமானாறு தண்ணீர்த் தாங்கி அருகே அமைக்கப்பட்டுள்ள, வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் தலைக்கவசத்துக்கு 50 ரூபா அறவிடப்படுகின்றது.
அதிகரித்த கட்டணம் தொடர்பில் பொதுமக்கள், பாதுகாப்பு நிலைய ஊழியரிடம் வினவியபோது, வல்வெட்டித்துறை நகரசபையினரே 50 ரூபா அறவிடக் கூறினர் என்று முரண்பட்டார். இதுதொடர்பில் வல்வெட்டித்துறை நகரசபையின் உப தவிசாளர் நாகதம்பி பத்மநாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த வாகனப் பாதுகாப்பு நிலையம் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. வருமான வரி உத்தியோகத்தர் தலையிட்டு ரிக்கெட்டுகளைப் பறிமுதல் செய்து எச்சரித்துள்ளார். ஒரு மோட்டார் சைக்கிளுக்கு 40 ரூபாவும், ஒரு ஹெல்மெட்டுக்கு 20 ரூபாவும் அறவிடுமாறு உத்தரவிட்டுள்ளோம். குறிக்கப்பட்ட கட்டணத்தை மீறி அறவிட்டால் ஆலயத்தின் முன்பாக இயங்கிவரும், நகரசபையின் உற்சவகாலப் பணிமனையில் மக்கள் முறைப்பாடு தெரிவிக்கலாம்.-என்றார். (ச-66)

# பருத்தித்துறை நகர்த் தூய்மைக்கு மேலதிக சேவையில் கழிவகற்றல்



யாழ்ப்பாணம்,செப்.7
பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் கழிவுகளை அகற்றுவதற்கு மேலதிக கழிவகற்றல் சேவை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.
நகரசபையின் வழமையான திண்மக்கழிவகற்றல் சேவைக்கு மேலதிகமாகப் பிறிதொரு சேவை யின் ஊடாக கழிவகற்றல் செயற்பாடு இந்த மாதம் தொடக்கம் தினமும் மாலை 6 மணிக்கு முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இதனூடாக நகர்ப் பகுதி, வீதியோரங்களில் காணப்படும் குப்பைகள் நகரசபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்டுச் சுற்றுப்புறச் சூழல் தூய்மைப்படுத்தப்பட்டுவரு கின்றது.
அதேவேளை, வியாபார நிலையங்களில் திண்மக்கழிவு களைத் தரம்பிரித்துவைக்காத பட்சத்தில் முதற்தடவையாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாவது தடவையாக 10 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணமாக அறவிடப்படும். மூன்றாவது தடவையாகவும் அவ்வாறு செயற்பட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பருத்தித்துறை நகரபிதா வி. டக்ளஸ் போல் அறிவுறுத்தியுள்ளார். (ச-100)

G.C.E A/Level 2027
கணித, விஞ்ஞான வகுப்புக்கள்
தமிழ்/ஆங்கில மொழிமூலம்
Combined Maths
திரு.S.சதீஸ்வரன்
BSc (Hons) PGDE
(077 348 0708)
Biology
திரு.S.நித்தியானந்தன்
BSc (Hons) PGDE, MEd
(077 256 8522)
Physics
திரு.S.சிவகரன்
BSc (Hons) PGDE
திரு.V.பார்த்திபன்
BSc. PGDE
Chemistry
திரு.S.சிவசங்கர்
BSc (Hons) PGDE
திரு.G.தவசீலன்
BSc. PGDE
இலகுபடுத்தப்பட்ட நேர அட்டவணைகளில் மாலை நேர குழு வகுப்புகள்
விபரங்களுக்கும், அனுமதிகளுக்கும்
077 386 7695, 076 897 6665
APSS, No.188, K.K.S வீதி, சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாருக்குள் காற்றாலைத் திட்டம் ஒருபோதும் அனுமதிக்கவிடோம்

## மக்களின் ஒருமித்த குரலால் வெளியேறிய எரிசக்தி அமைச்சர்

**மன்னார், செப்.7**

**எமது கிராம மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் காற்றாலைக் கோபுரங்களை மன்னார்த் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். எமது பகுதிக்குள் காற்றாலை அமைக்க ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம் என மன்னார் மக்கள் ஒருமித்து எதிர்ப்பை தெரிவித்தனர்.**

மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவில் சௌத்பார்ப் பகுதியில் 2 காற்றாலை கோபுரங்களும், தாழ்வுப்பாட்டில் 2 காற்றாலை கோபுரங்களும், தோட்டவெளியில் 2 காற்றாலைக் கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளன. குறித்த 6 காற்றாலைக் கோபுரங்களும் 20 மெகா வாட் கொண்டதாக அமைக்கப்படவுள்ளன. மேலும் ஓலைத்தொடுவாய் பகுதியில் 6 காற்றாலை மின் கோபுரங்களும், பேசாலை மேற்கில் 2 காற்றாலை மின் கோபுரங்களும் அமைக்கப்படவுள்ளன. குறித்த 8 காற்றாலை மின் கோபுரங்களும் 50 மெகா வாட் கொண்டதாக அமைக்கபடவுள்ளன. இந்தநிலையில் குறித்த 5 கிராமங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து கிராம மக்களின் கருத்துகளைக் கேட்டறிய எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் மன்னாருக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வருகைதந்தனர். இந்தக் கலந்துரையாடலிலேயே கிராம மக்கள் ஒருமித்து காற்றாலைக் கோபுரத் திட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து வெளியேறினர். (ச-60,56)

# மின்சாரசபை ஊழியர்களுக்கு தன்னார்வ ஓய்வுத்திட்டம்

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, செப்.7

இலங்கை மின்சாரத் திருத்தச்சட்டத்தின் தன்னார்வ ஓய்வுபெறும் திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவிப்பில், இலங்கை மின்சாரசபையின் நிரந்தர ஊழியர்களுக்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. 2024ஆம் ஆண்டு இலக்கம் 36 இலங்கை மின்சாரச்சட்டத்தின் 18ஆம் சரத்தின் மூன்றாவது உபசரத்தின்படி இந்த உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தன்னார்வ ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ், நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலம் கொண்ட ஊழியருக்கு, முதல் 10 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு 12 மாத சேவைக்கும் இரண்டு மாதச் சம்பளமும், மீதமுள்ள ஒவ்வொரு 12 மாத சேவைக்கும் ஒன்றரை மாதச் சம்பளமும் இழப்பீடாக வழங்கப்படும். 10 ஆண்டுகளுக்கும் குறைவான சேவைக்காலம் கொண்ட ஊழியருக்கு, ஒவ்வொரு 12 மாத சேவைக்கும் 5 மாதச் சம்பளம் வழங்கப்படும், மீதமுள்ள சேவைக் காலத்துக்கு இழப்பீடு இல்லை. மேலும், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான விதிமுறைகள் உள்ளிட்ட பல நிபந்தனைகள் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ளன. (ச-இ)

# மன்னார் வலயத்தில் கிறேஷித் முதலிடம்



*மன்னார், செப்.7*

*2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்னார் கல்வி வலயத்தில், சென்.செபஸ்ரியன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவன் கிறேஷித் 170 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.* *(ச-60)*

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 . 11 . 1963 | 06 . 09 . 2025 |



**சுப்பிரமணியம் இராசேஸ்வரன்**
**(கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

வடமராட்சி, சீனாப்புலம் நெல்லியடி வடக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசேஸ்வரன் அவர்கள் நேற்று (06.09.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஶ்ரீராகினி (ஆசிரியர், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) அவர்களின் அன்பு கணவரும், அஸ்வின் (யா/இந்துக்கல்லூரி), அகிலாஸ் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருமைநாயகம், விக்கினேஸ்வரன், இராசமலர், மகேஸ்வரன், சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசந்தி, காலஞ்சென்ற சந்திரராணி காலஞ்சென்ற இராசலிங்கம், இராஜபற்குணநாயகி, ஶ்ரீரஞ்சனி, ஶ்ரீரதி, ஶ்ரீரங்கநாதன், ஶ்ரீவரதராஜன், ஶ்ரீகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 621 4576
077 887 8725

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 23.08.2025 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

**திரு இரத்தினம் தங்கேஸ்வரன் பத்தர்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமகள் வீதி,
[illegible]கோடு.

குடும்பத்தினர்.

(CS 3968) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு – வணிக/அலுவலக கட்டிடங்கள் தேவை
## SDB வங்கிக்கு கீழ்க்காணும் இடங்களில்

• யாழ்ப்பாணம் • மன்னார் • வாழைச்சேனை

### தகவல்கள்:

- இடத்தின் பரப்பளவு: 2,000 – 2,500 சதுரஅடிகள் ஆக இருக்க வேண்டும்.
- முகப்புப் பரப்பு: 20 – 25 அடி அகலமாக இருக்க வேண்டும்,அகலமில்லாத ஒடுங்கிய வடிவமைப்பாக இருக்கக் கூடாது.
- தரை மாபிள் டைல்களால் அமைந்திருக்க வேண்டும்.
- இரு மாடி கட்டிடமானால், முதல் மாடிக்கு உள்ளே இருந்து மேலே செல்லக்கூடிய வசதி இருக்க வேண்டும்.
- வாகன நிழற்குடை இடம்: குறைந்தபட்சம் 3–4 வாகனங்களுக்கு இடமிருப்பதுடன், Interlock paving ஆகிய வசதி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

### பொதுவான வசதிகள்:

- மின்சாரம் (மூன்று ஒழுங்குகள், 60 அம்பியர்)
- தண்ணீர் (1,000 லிட்டர் கொள்ளளவுடைய நீர் தொட்டி)
- மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதி
  அவசர வெளியேறும் வழி
- பெண்கள் மற்றும் ஆண்களுக்கு தனித்தனி மாபிள் டைல்களால் செய்யப்பட்ட கழிப்பறைகள்
- ஜெனரேட்டர் அமைக்க கூரை வசதியுடன் இடம் வழங்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்கள் முன்மொழிவுகளை கீழ்கண்ட முகவரியில் உள்ள டெண்டர் பெட்டியில் அல்லது மின்னஞ்சல் வழியாக (tender@sdb.lk) 01.08.2025 முன் சமர்ப்பிக்க வேண்டும். அஞ்சல் உறையின் மேல் இடது மூலையில் "SDB வங்கி – …………………. கிளை" என தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

முகவரி:
நிர்வாகத் தலைவர்,
நிர்வாகத் துறை,
SDB வங்கி,
எண்: 18/1, எட்மண்டன் வீதி, கொழும்பு 06
தொலைபேசி: 0112-515982

SDB வங்கி #உங்களைமதிக்கும்





## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற
## அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234



## வீடு வாடகைக்கு உண்டு

கிழக்கு கோண்டாவிலில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் அறைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 320 0039

(CS/59090) J-1



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பொற்பதி வீதி ஓரத்தில் 4 1/2 பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணறு, இரு பக்க பாதை உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 075 945 3391


# விசேட அறிவித்தல்



இது சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் உடன் வணிக உறவுகளைக் கொண்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு

எங்கள் நிறுவனத்தின் உதவி பொது முகாமையாளராகப் பணிபுரிந்து வந்த, **ராமகிருஷ்ணா வீதி, களுதாவளை 03, கல்வாஞ்சிக்குடியில் வசிக்கும் எஸ்.எம். ஆனந்தராஜன் (தேசிய அடையாள இல. 812967050V),** என்பவர் **2025 ஓகஸ்ட் மாதம் 04,** ஆம் திகதி முதல் எங்கள் நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இதற்கு பிறகு சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எங்கள் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஜனாதிபதியாகும் தகுதியுள்ளவருக்கு கட்சித் தலைமையை வழங்கத் தயார்

## சுதந்திரக் கட்சியின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.7

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கக்கூடிய இயலுமையுடைய எந்தவொரு நபருக்கும் கட்சி தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற 74ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய குழுக்களுக்குப் பொறுப்புகளை கையளிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இளைஞர், யுவதிகள் அரசியல் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்கவேண்டும். எனக்கு ஜனாதிபதியாகும் கனவு இல்லை. ஜனாதிபதியாகும் கனவில் இருப்பவர்கள் சுதந்திரக் கட்சித் தலைமைத்துவத்தைக் கோருகின்றனர்.

அவ்வாறானவர்கள் ஜனாதிபதியாகக் கூடிய தகுதி தமக்கிருப்பதை நிரூபித்தால் பொறுப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ஏ-இ)

# விபத்தில் உயிரிழந்தோருக்கு பிரதமர் நேரில் சென்று அஞ்சலி

எல்ல வெல்லவாயப் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் இறுதி அஞ்சலிக்காகத் தங்காலை நகரசபையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தங்காலை நகரசபைக்கு, பிரதமர் ஹரிணி அமரசூரிய நேரில் சென்று இறந்தவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.09.2025 ஞாயிற்றுக்கிழமை



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளைப் பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். சகோதர்களுக்காக செலவுசெய்யவேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

# விளையாட்டுகள் கல்விக்குத் தடையல்ல

வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம்,செப்.7**

**விளையாட்டுத்துறையில் ஆர்வமுடைய மாணவர்கள், கல்வியில் பின்தங்கிச் செல்வர் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல. விளையாட்டில் சாதித்த மாணவர்கள் கல்வியிலும் சாதித்துள்ளனர்என்றுவடக்குமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் தெரிவித்துள்ளார்.**

தேசிய ரீதியாக நடைபெற்ற உடற் பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், விளையாட்டு சாதாரணமான ஒரு விடயம் அல்ல. உடலை வருத்தித்தான் சாதனைகளைப் படைக்க முடியும். சிறிய ஒரு சோம்பேறித்தனம் அல்லது உடல் வலி தொடர்பான சலனம் போட்டிகளில் இருந்து பின்வாங்கச் செய்துவிடும். இவ்வாறான சூழ்நிலையில் தேசியமட்ட ரீதியில் இந்தப் பாடசாலை முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளமை பெருமைக்குரிய விடயம். விளையாட்டு அல்லது ஏனைய இணைப்பாடவிதானத் துறைகளில் பெற்றோர் தங்களது பிள்ளைகளை இணைப்பதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. அவர்கள் படிப்பில் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள் என்ற பயமே காரணம். ஆனால் விளையாட்டில் சாதித்த மாணவர்கள், கல்வியிலும் சாதனையாளர்களாக உள்ளனர் என்பதைப் பெற்றோர் விளங்கிக்கொள்ளவேண்டும்- என்றார். (ச-27)

# ஹோம வழிபாடு

யாழ்ப்பாணம்,செப்.7

சுன்னாகம் ஸ்ரீ மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய சந்தோஷி மாதா ஹோம வழிபாடுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

சந்தோஷி மாதா ஹோம வழிபாடுகளில் அடியவர்கள் அனைவரும் பங்குபற்றிக் ஹோமத்தின் நிறைவில் பூர்ணாகுதியிட்டு அம்பிகையின் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ.நா.சிவசங்கரக் குருக்கள் கேட்டுள்ளார். (ச-66)




நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)

# குருதிக்கொடை முகாம் இன்று

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுப் பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாமில் பங்கேற்று உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)



# அம்மன் வேடமிட்டுக் காவடியெடுத்த பக்தர்

யாழ்ப்பாணம்,செப்.7

கட்டுவனைச் சேர்ந்த நபரொருவர், துர்க்கை அம்மன் போன்று வேடமணிந்து, பறவைக் காவடியெடுத்து நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளார்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின், தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இந்த நேர்த்திக்கடனை நிறைவேற்றினார். (ச-66)



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று சனிக்கிழமை அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

யாராவது உங்களை அவமானப்படுத்தினால் ஒரு அனுபவம் சேகரிக்கப்பட்டதென்று கருதுங்கள்.

ஸ்டான்லி ஜோன்ஸ்

# இறுதிவரை அகழ்க!

அரியாலை - செம்மணிப் புதைகுழியின் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்திருக்கின்றன. 45 நாள்களைக் கொண்ட இரண்டாம்கட்ட அகழ்வுப்பணிகளின் போதும், அதற்கு முன்னர் இடம்பெற்ற சில நாள்கள் கொண்ட முதற்கட்ட அகழ்வுப் பணிகளின் போதும் 239 என்புத்தொகுதிகள் செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றன. விடயம் என்னவென்றால், இந்த 239 என்புத் தொகுதிகளும் அண்ணளவாக 30க்கு 50 சதுர அடிகள் கொண்ட பரப்புக்குள் இருந்து மட்டுமே மீட்கப்பட்டிருக்கின்றன. எனவே, செம்மணிப் புதைகுழி மிகவும் விலாசமானது என்றும், ஆதலால் அகழ்வுப் பணிகளை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்றும் முன்வைக்கப்படும் வலியுறுத்தல்களை புறமொதுக்கமுடியாது. அதற்கு 'குறுகிய' நிலப்பரப்புக்குள் மீட்கப்பட்ட 'கூடுதலான' என்புத்தொகுதிகளே சான்றாதாரம்.

செம்மணிப் புதைகுழியென்பது சாதாரணமானதொரு விடயமல்ல. அதற்குள் இருந்து மீட்கப்பட்டுவரும் ஒவ்வொரு மனிதக்கூடுகளும் ஓராயிரம் கதைகள் கொண்டவை. குழந்தைகளின் பொம்மைகள், பாடசாலைப் பைகள், கண்ணாடி வளையல்கள், பாதணிகள் என இவற்றின் பின்னாலுள்ள வலி பெரியது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று போர்க்குற்றங்களுக்கான சாட்சியத் திரட்டல்களும்தான். இந்த விடயத்துடன், செம்மணிப் புதைகுழி நெருங்கித் தொடர்புறுகின்றது. எனவே, போர்க்குற்றம் ஒன்றின் வலிமையான சாட்சியமாக இருப்பதற்கான அத்தனை ஏதுநிலைகளும் உள்ள செம்மணிப் புதைகுழியை, தொடர்ந்து அகழ வேண்டியது அரசின் கடமை. அதை உறுதிப்படுத்தவேண்டியது சர்வதேசத்தின் பொறுப்பு. வடக்கு, கிழக்கில் இதுவரை பல இடங்களில் சந்தேகத்துக்கு இடமானவகையில் மனித என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதற்கு அப்பாற்பட்ட நடைமுறைகள் அவ்வளவு வினைத்திறனாக இருந்ததில்லை. காலப்போக்கில் அந்த அகழ்வு நடவடிக்கைகள் நிதிப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தடைப்பட்டு மெல்ல மெல்ல இழுத்தடிக்கப்பட்டு பின்னர் மழுங்கடிக்கப்படும் நிலைமையே காணப்படுகின்றது. கடந்த அரசாங்கங்கள் புதைகுழிகளின் விடயத்தில் கைக்கொண்ட 'நரித்தன' தந்திரம் இதுதான்.

இவ்வாறான பின்னணியில் தற்போது செம்மணிப் புதைகுழி தொடர்பில் கூடுதல் கரிசனை எடுக்கவேண்டியது தமிழர் தரப்புக்கு அவசியமாகின்றது. எனவே ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், செம்மணிப் புதைகுழி விடயத்தில் இழுத்தடிப்புகளை மேற்கொள்ளாது அடுத்தகட்டப் பணிகளைத் துரிதப்படுத்தவேண்டும். இறுதி என்புத்தொகுதி மீட்கப்படும்வரை செம்மணி அகழப்படவேண்டும். ஏனெனில், ஒவ்வொரு என்புத்தொகுதியும் வெவ்வேறு துன்பியல் கதைகளைக்கொண்டவை. அத்துடன், ஒரு போர்க்குற்றம் நிகழ்ந்தமைக்கான அனைத்து ஏதுநிலைகளையும் உடைய மிகப்பெரும் சாட்சியமாகத் திகழ்பவை.




# நாட்டில் மாணவர்களின் மன ஆரோக்கியம் சரிவு



ஆய்வில் கண்டறிவு

**கொழும்பு, செப்.7**

**2016ஆம் ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் கூர்மையான சரிவு கண்டறியப்பட்டுள்ளது.**

இலங்கையின் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகள், உலக சுகாதார நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய ஒரு புதிய கூட்டுக் கணக்கெடுப்பில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. சுமார் 3 ஆயிரம் மாணவர்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஊட்டச்சத்துக் குறைபாடு, உடற்பருமன், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் குறைந்த பழங்கள் மற்றும் காய்கறி நுகர்வு என்பன தெரியவந்துள்ளன. அத்துடன் மனநலக் கவலைகளும் மோசமடைந்துள்ளதாகவும் 22 வீதமானோர் தனிமையை நாடுதல் என்றும் 18 வீதம் பேரிடம் மனச்சோர்வின் அறிகுறிகள் மற்றும் 15 வீதமானோரிடம் உயிர்மாய்ப்புப் பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. சர்வதேச நாணயநிதியத்தினால் இயக்கப்படும் சிக்கன நடவடிக்கைகள், சிறுவர்களுக்கான ஆதரவு அமைப்புகளை மேலும் குறைமதிப்புக்கு உட்படுத்தும் என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

# கொத்து, ரைஸ் விலை குறைப்பு

கொழும்பு, செப்.7

ரைஸ், கொத்து, பிரியாணி, முட்டை ரொட்டி உள்ளிட்ட உணவுகளின் விலை 25 ரூபாவால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ஹர்ஷன ருக்ஸான் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்து வகையான சிற்றுண்டி உணவுகளின் விலைகளும் 10 ரூபாவால் குறைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# 40,000 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு

கொழும்பு, செப்.7

அரசாங்கத்தின் நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து அதிக அளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல்கொள்முதல் செய்வதற்காக முதற்கட்டமாக அரசாங்கம் 60 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. அதில் 55 ஆயிரம் மில்லியன் ரூபா விவசாயிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# விசேட சுற்றிவளைப்பு 5,167 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 5ஆயிரத்து 167 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். (ச-இ)

எல்ல பஸ் விபத்து

# உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு

கொழும்பு, செப்.7

எல்ல வெல்லவாயப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்குத் தலா 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க ஜனாதிபதி நிதியம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தங்காலையில் இருந்து சுற்றுலாவுக்கு வந்த குழுவொன்றை ஏற்றிச் சென்ற பேருந்து, எல்ல வெல்லவாய பிரதான வீதியின் அருகேயுள்ள பள்ளத்தாக்கில் கவிழ்ந்து கடந்த வியாழக்கிழமை விபத்துக்குள்ளானது. இதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணியும் வீடும் விற்பனைக்கு

கந்தர்மடத்தில் சகலவசதிகளுடன்
3 பரப்பும் 1 1/2 குளியும் உடைய
வீடும் காணியும்
விற்பனைக்கு உண்டு.
10 அறைகள், நன்னீர் கிணறு,
நான்கு பக்கமும் சுற்றுமதில்.
தரகர் தேவையில்லை.
(CS/59323) J-1

077 960 4095, 077 277 0966

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

077 334 1281

## மணமகள் தேவை

1991, இந்து, உத்தரட்டாதி, ENGINEER
பூர்வீகம் - பருத்தித்துறை, வதியுமிடம் - AUSTRALIA
மணமகன் பதிவு இல: 12018.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(CS/30254b) J-1
www.EQMarriageService.com

## கார் விற்பனைக்கு

Toyota Premio Superiior G
CAA - XXXX பாவித்த நல்ல நிலையில்
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 464 9690

## காணி விற்பனைக்கு

கைதடியில் 4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 669 5226, 077 500 5972

# நிறுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டம்; பாதிக்கப்பட்டவர்களுடன் சந்திப்பு

கிளிநொச்சி,செப்.7

கிளிநொச்சி மாவட்டத்தில், முன்னைய அரசாங்கத்தால் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களால், பாதிக்கப்பட்டவர்களை நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்புப் பிரதியமைச்சர் தலைமையிலான அதிகாரிகள் நேரடியாகச் சென்று சந்தித்தனர்.

மாவட்டத்தின் வீடமைப்பு, மின்சாரம், நீர் வழங்கல், கண்ணிவெடியகற்றல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சிமாவட்டச்செயலகத் திறன்விருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

கலந்துரையாடலைத் தொடர்ந்து பரந்தன் பகுதியில், அமைச்சின் நிதியில் அமைக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிக்கப் பட்டது. தொடர்ந்து பரந்தன் பகுதியில் அமைச்சின் நிதியூடாக நிர்மாணிக் கப்படவுள்ள வீட்டுக்கான அடிகல்லும் நடப்பட்டது.

தொடர்ந்து புன்னைநீராவி மற்றும் இராமநாதபுரம் கிராமத்தில், வீடமைப்பு அதிகாரசபையால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களின் நிலைமைகளையும் நேரில்சென்று பார்வையிட்டனர். வீடுகளை உடனடியாகப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று பாதிக்கப்பட்டவர்களுக்குப் பிரதியமைச்சர் உறுதியளித்தார். (ச-113)

## மணமகன் தேவை

1988, இந்து, பூரட்டாதி, TEACHER
பூர்வீகம் - கொக்குவில், வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11598.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(CS/30254A) J-1
www.EQMarriageService.com

ஓம் விராட்விஸ்வப்பிரம்மனே நம:

## அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
## கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

### கேதார கௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் விசுவாவசு வருடம் புரட்டாதி திங்கள் 16ஆம் நாள் (02.10.2025) வியாழக்கிழமை முதல் கௌரி விரதம் ஆரம்பமாகவிருப்பதால் விரதகாரர்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**கோவில் திறந்திருக்கும் நேரம்**
காலை : 06.00 மணிமுதல் 09.00 வரை
மதியம் : 11.30 மணிமுதல் 12.30 வரை
மாலை : 04.00 மணிமுதல் 06.00 வரை

**செவ்வாய், வெள்ளி**
காலை 06.00 மணிமுதல் 12.00 மணிவரை

**தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்**
(CS 59310) E

THE FUTURE OF IMAGE INDUSTRY
THEVENI ESA 2025
15 ஆவது முறையாக நடத்தப்படும்
தெவனி எச 2025

இலங்கையின் மிகப் பெரிய
புகைப்பட | வீடியோ | சைன்
அச்சிடல் | விளம்பர
வர்த்தகக் கண்காட்சி

செப்டம்பர் 13|14
கொழும்பு 07
BMICH இல்

PRINCIPLE SPONSOR: Softnet Information (Pvt) Ltd, Album Factory by Softnet
EXCLUSIVE SPONSOR: digimax
PLATINUM SPONSORS: CREATIVE TECHNOLOGIES, LIPI, CREATEMARK
GOLD SPONSOR: ARISSONA, LAKDAM Technologies
SILVER SPONSOR: Debug Digital Centre (Pvt) Ltd, PROTECH DIGITAL SOLUTION
ACADEMIC PARTNER: Image Art
EXIHIBITORS: metropolitan, medTECHNOLOGY, AUSTRIYA, SILVER-INN Photo Service, ravindu ADVERTISING SERVICE, E-SCREEN SYSTEMS, BSN, RAINBOW MACHINES, Pluss INTERNATIONAL, Lakseya, lanyard.lk, Aruna Ads, TheMagicTouch, Camera Tek, ANURA CAMERA Technical, LEXCO, SHUTTER HOUSE Quality Tech, Better Value, CAMERA SPARES, ABC PROMO materials, APTARA
SUPPORTED BY: SLWPA, fotostar
MEDIA SPONSORS: DAILY MIRROR, the SUNDAY TIMES, tvG, Capital, Capital NEWS, Capital
ORGANIZED BY: THEVENI ESA

அழையுங்கள்: அனுஷ- 077 306 35 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து




**06.09.2025 இல் மணிவிழா கண்டு இன்று பிறந்ததினத்தை கொண்டாடும் ஆசான்.**

## திருமதி யசோதை சிவபாதசக்தி

*Best Wishes* *Best Wishes*

இசையால் மாணவர் மனம் கவர்ந்தீர்
இனிமையாக பேசி அனைவரையும் ஈர்த்தீர்
கோவில்களில் பாராயணம் செய்தீர்
சேதுகாவலர் வித்தியாலயத்தில் வித்தைகள் செய்தீர்
ஆரம்பப்பிரிவு வகுப்புகளிலும் விருப்புடன் கற்பித்தீர்
அலுவலகப் பணிகளிலும் ஆர்வத்துடன் பணிசெய்தீர்
உம் கடமை தனில் கண்ணும் கருத்துமாய் திகழ்ந்தீர்
உம் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

***சேவை விபரம்.***

| | | |
|---|---|---|
| ◆ மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | - 29.12.1985 | - 30.06.1986 |
| ◆ மன்/ ஆண்டான்குளம் றோ.க.த பாடசாலை | - 01.07.1986 | - 14.02.1988 |
| ◆ கோப்பாய் ஆசிரிய கலாசாலை | - 15.02.1988 | - 31.12.1989 |
| ◆ மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி | - 01.01.1990 | - 01.08.1991 |
| ◆ யா/கைதடி குருசாமி வித்தியாலயம் | - 02.08.1991 | - 23.07.2004 |
| ◆ யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை | - 24.07.2004 | - 31.12.2008 |
| ◆ யா/சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம் | - 01.01.2009 | - 31.12.2015 |
| ◆ யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | - 01.01.2016 | - 31.12.2016 |
| ◆ யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | - 01.01.2017 | - 02.08.2022 |
| ◆ யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் | - 03.08.2022 | - 06.09.2025 |

(CS/30258) J-1

வாழ்த்துவோர்: **பாடசாலை சமூகம்**

## யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

**கைதடி மத்தி**

---

உ



## திருப்பணிச்சபை

## ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சுவாமி கோவில்

### அன்பான வேண்டுகோள்

**அன்பான சிவபெருமான் மெய்அடியார்களே!**

எமது கிராமத்தின் குலதெய்வங்களில் ஒன்றான ஆவரங்கால் சிவன்கோவில் தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பெற்று திருப்பணி வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இப்பணியை நிறைவேற்ற பெரும்நிதி தேவையாக உள்ளது. எனவே தங்களால் ஆன நிதிப்பங்களிப்பினை நல்கி ஆலயகும்பாபிஸேகம் இடம்பெறுவதற்கு தங்களது பூரண ஆதரவினை நாடி நிற்கின்றோம்.


**"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்"**

என தங்களைக் கிராமத்தின் சார்பில் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**கீழ் குறிப்பிடப்படும் வேலைகள் செய்வதற்கான மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளன.**

01.மூலஸ்தான மண்டப திருத்தவேலை.
02.வசந்தமண்டபம் நிர்மானித்தல்.
03.யாகசாலை நிர்மானித்தல்.
04.பரிவாரமூர்த்திகளுக்கு மாபிள் பதித்தல்.
05.தேர்முட்டி சீர்செய்தல்.
06.வெளிவீதி செப்பனிடல் .
07.களஞ்சிய அறை நிர்மானித்தல்.
08.ஆலய வயரிங் வேலை.
07.அன்னதான மண்டபத்திற்கு வர்ணம் தீட்டல்.
08.ஆலயசுற்றுக்கொட்டகை மீள் நிர்மானம் செய்தல்.
09. தீர்த்தக்கேணிக்கு வர்ணம் தீட்டுதல்.
10.இராஜ கோபுரங்களுக்கு வர்ணம் தீட்டல்.
11. உள்வீதி சீர்செய்தல்.
12. ஆலய முகப்பு மண்டபம் வர்ணம் தீட்டுதல்.
14.மடப்பள்ளி அறை நிர்மானித்தல்.





**கணக்கு இலக்கம்:- 93371614**
**(இலங்கை வங்கி)**

**திருப்பணி வேலை தொடர்பான தொடர்புகளிற்கு.**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| திருமதி.பு. மனோகரநேரு | திரு.த. நந்தன் | திரு.செ. கஜன் |
| 0765500838 | 0773042961 | 0777222308 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பையொன்றிலிருந்து மண்டைஓடுகள்மீட்பு!

கொழும்பு, செப்.7
வெயாங்கொடை நைவலப் பகுதியிலுள்ள வீடொன்றுக்கு அருகில் பையொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் 4 மனித மண்டை ஓடுகள் மற்றும் பல எலும்புத் துண்டுகள் ஆகிய வற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த காணியின் வீட்டின் ஒரு அறையில் கிராம அலுவலர் அலுவலகம் அமைந்திருந்தது. கிராம அலுவலர், எலும்புக்கூடுகள் அடங்கிய பையை அவதானித்த நிலையில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். குறித்த நிலம், சில ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவர் ஒருவருக்குச் சொந்தமாயிருந்தது எனத் தெரியவந்துள்ளது. இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அழகுக் கலை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை (Pedicure அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது). +41779180476
Whats app குறுந்தகவல் ஊடாக மட்டும் தொடர்பு கொள்ளவும்.

## Grocery Shop Vacancy

**We are Hiring (Female Candidates)**

**Responsibilites:**

- Pos billing & Data Entry
- Full billing management
- Account management

Location: KKS Road, Jaffna Town
Bring your CV when applying

**077 259 8903**


## Invitation for Bids (IFB)
## Procurement of Repair, Maintenance & Service of "Water Treatment Plants" in Teaching Hospital-Jaffna for Year 2025/2026

1. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for **Repair, Maintenance & Service of "Water Treatment Plants" in Teaching Hospital-Jaffna for Year 2025/2026**
   A. Bidding will be conducted through Nation Competitive Bidding. (Procurement Guideline 2024 is entitled to this Procurement)
   B. To be eligible for contract award the successful bidder shall meet the following requirements:
      a. The bidder shall not have been Black listed by Hospital or other institutes previously
      b. Bidders shall be a reputed company incorporated under Companies Act No.7 of 2007, having experience in planning, engineering, supplying, installing, testing, commissioning and maintenance of similar type system in the role of a contractor, within at least the last five (05) years prior to the Bid Submission Deadline
2. Interested eligible bidders may obtain further information from Accountant, Teaching hospital, Jaffna (**Email: acctjaffnath@gmail.com, 0212222261 Ext: 219**) and inspect the bidding documents during 09.00 hrs to 15:00 hours on any working day from **2025-September-8 (Monday), until 2025-September-22 (Monday).** Bidders are requested to inspect the bidding document prior to purchase and once it is purchased, bidding document fee is not refundable for any reason whatsoever.
3. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Director, Teaching Hospital, Jaffna at the above address during 09.00 am to 16:00 hours on any working day from **2025-September-8 (Monday), until 2025-September-22 (Monday).** upon payment of a non-refundable fee of Sri Lankan Rupees Five Thousand (Rs. 5,000.00). The method of payment will be cash & should be made at the shroff of the Hospital.
4. The bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contract Act No. 03 of 1987 and the Certificate of Registration or payment receipt shall be submitted along with the bid.
5. Bids must be delivered to the address below at or before 10:00 am on **2025-September 423 (Tuesday),** when bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address below; late bids will be rejected.
6. All bids shall be accompanied by a Bid-Security in favour of the Director, Teaching Hospital Jaffna. Acceptable Bid Security details & Bid validity period is as per the Bidding Document.
7. Pre-bid meeting will be held at Conference hall, Second Floor, Rehabilitation Building, Teaching hospital, Jaffna commencing at 09.30 hrs on **2025-September-16 (Tuesday)**
8. The Chairman reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such. Client is not bound to accept the lowest or any bids. Procurement Committee will not be responsible for any costs or any expenses incurred by the Bidders in connection with the preparation or delivery of Bids

Chairman,
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.


## மாபிள் வேலை

தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். 1சதுர அடிக்கு-75/=
தொடர்பு: 076 551 3950
077 940 7993

## வீடு வாடகைக்கு

அம்மன் வீதி கொக்குவில் கிழக்கில் மருத்துவபீட சூழலில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 608 6209


# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 04 . 1953 — மறைவு 05 . 09 . 2025

## அமரர் டாக்டர் திருமதி விமலாதேவி தங்கவேல்

**(பதிவு வைத்திய அதிகாரி)**

நவாலியினைப் பிறப்பிடமாகவும், சிங்கை நகர் புலோலி தெற்கு, புலோலியினை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் திருமதி விமலாதேவி தங்கவேல் அவர்கள் கடந்த (05.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் மூத்த அன்பு மருமகளும், திரு வி.ஜீ.தங்கவேல் (பனைவள ஆலோசகரும் சமூக செயற்பாட்டாளரும் அவர்களின் அன்பு மனைவியும், வேனினி (அவுஸ்ரேலியா), விமல்ஷினி (சட்டத்தரணி முன்னாள் கிராமசேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் பருத்தித்துறை), தர்சினி (Freelancer Accountant) ஆகியோரின் அன்புமிகு தாயாரும், ரமணன் (அவுஸ்ரேலியா), நிமல்ராஜ் (பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் ), பிந்து மைக்கேல் (Territory Manager Asian paints - Causeway) ஆகியோரின் அன்பு மாமியாரும் கல்கி, கணியன், நிவிகேஷன், ஆருஷிபெலினா, ஆதினிமீயாழ், வினிக்ஷன் ஆகியோரின் அன்புமிக்க பேத்தியாரும், அமரர் சிவஞானசேகரம், விஜயதேவி, அமரர் குலசேகரம், லலிதாதேவி, சறோஜினிதேவி, நஞ்சினிதேவி, தவராஜசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 535 5437,
077 802 8491
077 630 6723

சிங்கை நகர்,
புலோலி தெற்கு, புலோலி

(CR/46007) J-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09 . 04 . 1963 — மறைவு 06 . 09 . 2025

எமது ஆருயிர் நண்பரும் பல்வேறு வழிகளில் எம்மை ஆற்றுப்படுத்தி எமக்கு உறுதுணையாய் இருப்பரும் பிரபல சமூகசேவையாளருமாகிய செங்கைப்புரவோன் உயர்திரு இராசையா குவேந்திரநாதன் அவர்களின் அன்புப்பாரியார்

**திருமதி றஞ்சினிதேவி குவேந்திரநாதன் அவர்களின்**

திடீர்மறைவினால் தாங்கொணா துயருற்றிருக்கும் அவரிற்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**விஸ்ராவிஷன் கலர்லாப், யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் இருப்புக்காகவே தமிழ்க்கட்சிகளால் இனவாதம்

## அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



கொழும்பு,செப்.7

அரசியல் இருப்பு இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் வடக்கிலுள்ள பாரம்பரியக் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இனவாத ரீதியில் மக்களைப் பிரித்தால்தான் அவர்களால் அவர்களுக்குரிய இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளமுடியும். எனவே, அவர்கள் வெளியிடும் கருத்துகள் பற்றி அலட்டிக்கொள்ள தேவையில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் இரண்டு, மூன்று தடவைகள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். புலிகளின் சித்தாந்தக் கருத்தியலுடன் தாம் இல்லை என்ற செய்தியை தமிழ் மக்கள் எமக்கு வழங்கியுள்ளனர். இது வடக்கிலிருந்து தெற்குக்கு வழங்கப்பட்ட செய்தியாகும். வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் இனவாத அரசியலிலேயே அவர்களின் இருப்பு தங்கியுள்ளது. இனவாத ரீதியில் மக்களைப் பிரித்தால்தான் அவர்களால் அவர்களுக்குரிய இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளமுடியும். கடந்த தேர்தல்களில் வடக்கு மக்கள் பாரம்பரியக் கட்சிகளை நிராகரித்தனர். இந்த நிலைமை தொடர்ந்தால் தமது இருப்புக்கு ஆபத்து என்ற அச்சம் வடக்கில் உள்ள பாரம்பரியக் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

நாம் வடக்கு மக்களுடன் இணைந்து பணியாற்றுவோம். இனவாத அரசியல் மற்றும் அடிப்படைவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய சமத்துவம் கட்டியெழுப்படும் - என்றார். (ச-44)

## விழிநீர் அஞ்சலி

### குவேந்திரநாதன் ரஞ்சினிதேவி




எம் கிராமத்தின் கொடை வாரிதி குவேந்திரநாதன் (Raja Plaza) ஜயாவின் மனைவியும் எம் ஆருயிர் நண்பன் Dr. சுமனின் அம்மாவும் ஆகிய காலஞ்சென்ற குவேந்திரநாதன் றஞ்னிதேவி அவர்கள் நேற்று (06.09.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

**நீங்கள் உலகை விட்டு சென்றாலும்,**
**எங்கள் மனம் விட்டு போகவில்லை,**
**உங்கள் நினைவுகள் என்றும் வாழும்,**
**ஆழ்ந்த அனுதாபங்கள்...**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஈர விழிகளுடன்,**
**சிவபாலன், சபேசன் குடும்பம்.**

## மரண அறிவித்தல்



தோற்றம்
08 . 09 . 1956

மறைவு
05 . 09 . 2025

### முருகேசு விஜயமோகன்

சுதுமலை தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு விஜயமோகன் அவர்கள் கடந்த 05.09.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - மாங்கையர்கரசி தம்பதியரின் மருமகனும், லலிதகுமாரியின் அன்புக் கணவரும், துவாரகன் (MLT - Green Hospital, Manipay) அவர்களின் அன்புத் தந்தையும், சிவயோகம் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற லோகராணி, பத்மாவதி, சூரியகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2025) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: வி.துவாரகன்
077 229 3796

தகவல்:
குடும்பத்தினர்.

## நினைவஞ்சலி


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 08.08.1940
விண்ணில் 19.08.2024

அமரர்
திருமதி நமசிவாயம் புனிதவதி

31ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22.09.1937
விண்ணில் 06.01.1994

அமரர்
சங்கரப்பிள்ளை நமசிவாயம்

என்றும் எங்கள் மனதில் வாழும்
எங்கள் குல திலகங்கள்
வார்த்தைகளாய் வழிகாட்டாமல்
வாழ்ந்து வழிகாட்டினீர்கள்
எங்கள் குலதெய்வமான நுணுவில்
சிதம்பர விநாயகர் பாதங்களில்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


அம்பிகா டிஸ்பென்சரி
சாவகச்சேரி.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(CR 45830) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலாயுதம் பாலசிங்கம்

மலர்வு
09.02.1947

உதிர்வு
19.08.2024

ஆண்டு ஒன்று கடந்தாலும்
அழியாத உங்கள் நினைவுகள்
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

இந்தநாள் வரையில் உங்களை
இழந்துமே துடிக்கின்றோமே!
அந்தநாட் போல உங்கள்
அன்பிற்குத் தவிக்கின்றோமே!
சொந்தமோ சுகமோ எல்லாம்
சொர்க்கமே நீங்கள் தானே!
எந்தநாள் மீண்டும் உங்களை
எப்போ காண்போம்!

தந்தையாய் இருந்து எம்மைத்
தாங்கியே வாழ்ந்தீர்! இந்த
விந்தைமிகு உலகை வென்று
வாழவும் கற்றுத் தந்தீர்!
சிந்தையில் உங்கள் பாச
நினைவுகள் சுண்டி இழுக்க
வெந்திடும் மனதைத் தேற்ற
வருவீரோ நீங்கள் மீண்டும்!

**நித்தம் உங்கள் நினைவுகளோடு
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இல.42, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 076 297 8905
021 222 6438

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**



# ஆசிரியர் கலாசாலையில் சர்வதேச எழுத்தறிவு தினம்

யாழ்ப்பாணம், செப் 7

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சர்வதேச எழுத்தறிவுத் தினத்தையொட்டிய ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் கலாசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் அதிதிப் பேச்சாளராகக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியிலிருந்து அண்மையில் இளைப்பாறுகை பெற்றவருமாகிய விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் கலந்துகொண்டார். 2 ஆம் வருடக் கிறிஸ்தவநெறி ஆசிரிய மாணவி கமலினி 'எழுத்தறிவின் முக்கியத்துவம்' எனும் தலைப்பில் ஆசிரிய மாணவர் உரையாற்றினார்.

தொடர்ந்து இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களால் 'எழுத்தறிவு தினம்' தொடர்பான ஆவணக் காணொலி தயாரித்துக் காட்சிப்படுத்தப்பட்டது.

(ச-25,9,66)

# 'மிதிகமசூட்டி' ஓமானில் கைது

ஓமான், செப்.7

இலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக் குழுத் தலைவரான 'மிதிகம சூட்டி' என அழைக்கப்படும் பிரபாத் மதுஷங்க ஓமானில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கைப் பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க பிரபாத் மதுஷங்கவைக் கைது செய்வதற்கான சிவப்பு அறிக்கையை இன்டர்போல் வெளியிட்டிருந்தது. அதற்கமைய முதலில் டுபாய்க்கு தப்பிச்சென்று அதன் பின்னர் ஓமானிலுள்ள சொகுசு விடுதியில் தங்கியிருந்த நிலையில் மதுஷங்கவை ஓமான் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

(ச-இ)

# கண்ணீர் அஞ்சலி



**ராஜா பிளாசா உரிமையாளரின்
துணைவியார்**

**அமரர் குவேந்திரநாதன்
ரஞ்சினிதேவி**

அன்னாரின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

ஐங்கரன் களஞ்சியம்
109, பலாலி வீதி
திருநெல்வேலி
(உரிமையாளர்,
ஊழியர்கள்,
குடும்பத்தினர்)

கந்தவேள் களஞ்சியம்.
இராஜ வீதி,
திருநெல்வேலி
(உரிமையாளர்,
ஊழியர்கள்,
குடும்பத்தினர்)

தோற்றம்
09.04.1963

மறைவு
0[illegible].2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷீந்திர ராஜபக்ச பிணை மனுத்தாக்கல்

கொழும்பு, செப்.7 விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த மனு நேற்று முன்தினம் மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜெயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது கோரிக்கையை ஆராய வேண்டியுள்ளமையால் வழக்கு ஒக்ரோபர் 2ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

(ச-இ)

**Vacancy**

மானிப்பாயில் இயங்கும் பிரபல வாகன காட்சியறையொன்றுக்கு SALES EXECUTIVE தேவை.

தொடர்புகளுக்கு:

**077 108 9593**

## கண்ணீர் அஞ்சலி



**குவேந்திரநாதன் றஞ்சினிதேவி**

அவர்கள் நேற்று 06.09.2025 சனிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**சிறி மீனாட்சி நகை அகம் உரிமையாளரும், ஊழியர்களும்**

தோற்றம் 09.04.1963 — மறைவு 06.09.2025

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 18 . 11 . 1948



இறப்பு 07 . 09 . 2021

**அமரர் திருமதி சார்மதிதேவி சொர்ணலிங்கம் (சாருமதி அக்கா)**

**அல்லைப்பிட்டி-02-யாழ்ப்பாணம்**

அம்மா! என் அன்புத் தெய்வமே உனை போற்றி
நாலு வரிகள் எழுத என்னிடம் வார்த்தைகள்
இல்லையம்மா! உன்னை இழந்த துயரம் என்னை
விட்டுப் போகவில்லை நாதியற்று நடை பிணமாய்
அலைகிறேன் அம்மா! உனக்கு வலிகொடுத்து
பிறந்த காரணத்தால் உனை இழந்த வலியால்
தினம் தினம் துடிக்கிறேன் அம்மா! உன்னை
இழந்து விட்டேன் என்பதை விட தவறவிட்டேன்
என்பதே உண்மை!
பேசியும் புரியாத உறவுகளுக்கு மத்தியில்
பேசாமல் புரிந்து கொள்ளும் உறவு நீயும்மா!
கேட்டும் கொடுக்காத தெய்வங்களுக்கு மத்தியில்
கேட்காமல் கொடுக்கும் தெய்வம் நீயம்மா!
தாய் இருந்த போதினிலே இன்பம் வந்து சேர்ந்ததுவே
கை நழுவிப் போகையிலே துன்பம் மட்டும் வாழ்கிறதே
பாசம் உள்ள வேளையிலே காசு பணம் கூடலையே!
காசு வந்த வேளையிலே பாசம் வந்து சேரலையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

குறிப்பு: அன்னை சாருமதி அறக்கட்டளை ஊடாக எமது அம்மாவின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா ஓமந்தை (வேப்பங்குளத்தில்) உள்ள தேவசபை மண்டபத்தில் இன்று (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு மதிய உணவு வழங்கப்படும்.

நிர்வாகி
**அன்னை சாருமதி அறக்கட்டளை**

(CS56177) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 09 . 1956



மறைவு 04 . 09 . 2025

### அமரர் சிவராணி நல்லநாதன் (ராஜி)

வவுனியா வைரவர் புளியங்குளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவராணி நல்லநாதன் (ராஜி) அவர்கள் கடந்த (04.09.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கண்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான நல்லையா - இரத்தினாம்பிகை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவகாமி, சிவகுரு, சிவபாலன், சிவநாயகி, சிவானந்தன் மற்றும் சிவசோதி (வவுனியா), சிவயோகம் (வவுனியா) ஆகியோரின் சகோதரியும், நல்லையா நல்லநாதன் (உரிமையாளர் பிள்ளையார் மெட்டல் லக்ஷ்மி கேட்டரிங் சேர்விஸ் - வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், மயூரன் (முகாமையாளர் LOLC நெல்லியடி கிளை), தீபன் (லண்டன்), பைரவி (அபிவிருத்தி உத்தியோகத்தர் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும், பவித்ரா (யாழ்ப்பாணம்), அனுஜா (லண்டன்), கிருஷாந்தன் (மக்கள் வங்கி வன்னி பிராந்திய அறவிடல் அதிகாரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாகரன், அபர்ணன், வெண்பா, சூரியா, ஆரவி, விஷாகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை இல. 64, வைரவர் கோயில் வீதி, வைரவர்புளியங்குளம், வவுனியா இல் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ந.மயூரன் (மகன்) - 077 803 9535
ந.தீபன் (மகன் - லண்டன்) - 0044 750 155 4164
கி.பைரவி (மகள்) - 070 588 6991

தகவல்:
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS59329) J-1

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கம்மா திருநாவுக்கரசு

(ஓய்வு நிலை ஆசிரியை-யாழ் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்)

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா திருநாவுக்கரசு அவர்கள் தனது நூறாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருநாவுக்கரசு (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், கௌரி (ஓய்வு நிலை ஆசிரியை), தேவமனோகரி, முருகானந்தன், பிறை (நோர்வே), துளசிமனோகரி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணேசலிங்கம், ஸ்ரீதரன் (நில அளவையாளர்-சிலாபம்), உமா, சுகிர்தா (நோர்வே), DR.கணேஷ் (இந்தியா) ஆகியோரின் அருமை மாமியாரும், யதுநந்தன் (UK), மதுரா (ஆசிரியை), கார்த்திகா, அபிராமி (சம்பத்வங்கி), திவ்யா, சிநேகா (நோர்வே), அபிஷேக் (நோர்வே), அஸ்வின், அரவிந் (இந்தியா), டிலானி (UK), DR.பரமேஸ்வரன் (யாழ் போதனா வைத்தியசாலை), சுதர்சனன் (பொறியியலாளர்), கோகிலன் (சம்பத்வங்கி) ஆகியோரின் பேர்த்தியும், ஆத்மிகன், குழலி (UK), கவின்மிஹிரன், அருணநேத்ரன், அனுராகவ், ஹரிஷாங்கி, சிவசகானா, சாருகேஷி, சம்யுக்தா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்று, கல்கிசை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


28/36, மணற்றறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
10, சென்மேரிஸ் வீதி,
சிலாபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய்ப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கான பிரதேச விளையாட்டுப் போட்டியின் முதல் குழுநிலைப் போட்டியாக ஆண்களுக்கான கரப்பந்து மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகள் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (ச)



## உரும்பிராயில்...

பன மோதுண்டே இந்த விபத்து சம்பவித்துள்ளது. மோட்டார்சைக்கிளில் பயணித்த நபர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## ஜெனிவா...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர், சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில், ஆணையாளர் வோல்கர் ட்ரக்கின் உரையுடன் நாளை ஆரம்பிக்கவுள்ளது. ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதிவரை கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், பல்வேறு விடயங்கள் தொடர்பில் 37 பரந்துபட்ட உரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இரண்டாவது உரையாடலில் இலங்கை மற்றும் மியான்மர் விவகாரங்கள் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்படவுள்ளது. இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் உரையாற்றுவதுடன், புதுப்பித்த அறிக்கையையும் வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வோல்கர் ட்ரக் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்கும் சென்று கள அவதானிப்புகளை மேற்கொண்டிருந்தார். அத்துடன், செம்மணி மனிதப் புதைகுழிக்கும் சென்றிருந்தார். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் அவர் தனது வாய்மூல - எழுத்துமூல அறிக்கையில் சில விடயங்களை வலியுறுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இலங்கை தொடர்பில் கனடாவும் பிரிட்டனும் சில நகர்வுகளை அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் நிலையில், விசேட தீர்மானம் ஒன்று முன்வைக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றமையும் குறிப்பிடத் தக்கது. (அ-ம)

## இரண்டாம்...

இதுவரை 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தின நிலவரத்தின் அடிப்படையில் செம்மணிப் புதைகுழிக்குள் 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன், அவற்றில் 235 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் இறுதி நாளான நேற்று மேலும் நான்கு என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுத் தொடர்ந்து, இதுவரை மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 239ஆக அதிகரித்துள்ளது. இதையடுத்து, கடந்த 45 நாள்களாக இடம்பெற்றுவந்த அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் செ.லெனின்குமார் இந்த அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கிருஷாந்தியின்...

கப்படவுள்ளது. 1996ஆம் ஆண்டு உயர்தர மாணவியாகவிருந்த போது இலங்கை இராணுவத்தால் கிருஷாந்தி கைது செய்யப்பட்டு, வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரின் 29ஆவது நினைவேந்தல் நிகழ்வையே இன்று முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, இன்று காலை 9 மணியளவில் நினைவுச் சுடரேற்றல் மற்றும் மலர் வணக்கத்துடன் நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமாகும். காலை 9.30 மணியளவில் நினைவுப் பகிர்வு நிகழ்வும், முற்பகல் 10 மணியளவில் 'வாசலிலே கிரிஷாந்தி' கவிதைத் தொகுப்பு வெளியீடும், முற்பகல் 10.30 மணியளவில் ஆவணக் காட்சிப்படுத்தல் நிகழ்வும் நடைபெறுமென ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66-20-26)

## அவதானிக்கப்பட்ட...

இதுவரை 240 என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்ட நிலையில், 239 என்புத் தொகுதிகளே மீட்கப்பட்டுள்ளன. ஓர் என்புத் தொகுதி மீட்கப்படாத நிலையில், 'ஆதாரப்படுத்தல் அடையாளங்களுடன்' புதைகுழி நேற்று மூடப்பட்டது.

அந்த என்புத் தொகுதி கோர்வையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே அது மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வெற்றுக்...

என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஒரு வாரத்துக்கு முன்னரே இத்தீவிலிருந்து வந்திருந்தார் என்றும் உறுப்பயிற்சி நடைக்காக் சென்றிருந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் முன்னெடுத்த முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-20-26)

## முதியவர்...

இளவாலைப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்தோனிப்பிள்ளை பிறேன் பீற்றர் என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிகவிசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த முதியவருக்கு வலிப்பு நோய் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-20)

## செம்மணி...

தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. கடந்த வழக்குத் தவணையின்போது மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜெட்டை சமர்ப்பிக்குமாறும், நிபுணர்களின் இடைக்கால அறிக்கையையும் நீதவான் கோரியிருந்தார். இந்த விடயங்கள் எதிர்வரும் வழக்குத் தவணையின் போது முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் நடைபெறும் முதலாவது நீதிமன்ற நடவடிக்கை என்பதாலும், எதிர்வரும் வழக்குத் தவணையில் பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளன. (அ-ம-26)

## பக்த...

பக்திபூர்வமாக இடம்பெற்றது. நேற்றுக்காலை சிறப்பு அபிஷேகம், பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி வசந்தமண்டபப்பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதி வேற்பெருமான், விநாயகப் பெருமான், சண்முகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் உள்வீதி உலாவந்து காலை 9.10 மணியளவில் முத்தேர்களில் ஆரோகணித்தனர். சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டுச் சிறப்புத் தீபாராதனை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க முற்பகல் 9.42 மணியளவில் சித்திரத் தேர்களின் பவனி ஆரம்பமானது.

முத்தேர் பவனி இடம்பெற்ற போது நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சனை செய்தும், பல பெண் அடியவர்கள் அடியளித்தும், கற்பூரச் சட்டிகள் எடுத்தும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினார்கள். அத்துடன் நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்தும் பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள், செதில் காவடிகள் உள்ளிட்ட காவடிகள் எடுத்தனர். (அ-ம-66)

## திஸ்ஸ...

தில் ஈடுபட்டனர். திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச்சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பௌர்ணமி தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் போராட்டம் ஆரம்பமாகி மாலை 6 மணியளவில் நிறைவு பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-66)

## உடையார்கட்டில்...

உயிரிழந்தார். புதுக்குடியிருப்பு ஒன்பதாம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்திரமோகன் சானுசன் (வயது-22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரு மோட்டார்சைக்கிள்கள் மோதி ஏற்பட்ட விபத்தின்போது தூக்கி வீசப்பட்ட அந்த இளைஞர் மீது, வீதியால் சென்ற வாகனமொன்று ஏறியதைத் தொடர்ந்தே அவர் உயிரிழந்தார் என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மற்றொரு நபர், தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள பிரபல கவரிங் நகைகள் விற்பனை நிலையத்திற்கு உதவியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-

077 351 5980, 077 563 2734

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதியில் இருந்து 100m தூரத்தில் கட்டப்பிராயில் 4 பரப்பும் 3 குழியும் வீட்டுடனான காணி விற்பனைக்கு உண்டு.

076 330 9761

WhatsApp: +1 905 923 6664

# வெளிநாட்டு முதலீடுகளை இலங்கை ஈர்க்கவேண்டும்

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு



**கொழும்பு,செப்.7**

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு, வெளிநாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பது மிகவும் முக்கியமானது என்று ஜப்பான் தூதுவர் அகியோ இசொமாட்டா தெரிவித்துள்ளார்.**


ஜப்பான் அரசின் 65 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியில் அமைக்கப்படும் ஹபரணை - வேயாங்கொட மின்பரிமாற்றத் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டம் ஹபரணை மற்றும் வேயாங்கொட இடையே குறைந்த வலுமின் பரிமாற்ற வழிகள் மற்றும் துணை மின்நிலையங்களை அமைப்பதன் மூலம், இலங்கையின் மின்விநியோகத் திறனை வலுப்படுத்துவது, மின் விநியோகத் தின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவது, மற்றும் மின்பரிமாற்ற இழப்பைக் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 3 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த ஜப்பான் கடன்திட்டங்கள் கடந்த ஜூலை மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை ஊழலை ஒழிப்பது, உள்கட்டமைப்பை மேம்படுத்துவது, வணிகச் சூழலை மேம்படுத்துவது மற்றும் தெளிவானதொழில்துறை மேம்பாட்டுக் கொள்கைகளை உருவாக்குவது வெளிநாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இலங்கைக்கு அவசியமானவை - என்றார். (ச-இ)




**சாரதி தேவை**

குறிப்பு: யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-

077 780 7025

**காணி விற்பனைக்கு உண்டு**

நாயன்மார்கட்டு கனகரெத்தினம் வீதியில். செம்மணி வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

077 970 2508

(CS/59331) J-1

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளையில் குருநாதர் சுவாமி கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள 24 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

077 161 1853

077 043 9822

(CS/59301) J-1

**காணி விற்பனைக்கு**

காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை சந்திக்கு அருகாமையில் 8 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

077 161 1853

077 043 9822

(CS/59301) J-1

**காணி விற்பனைக்கு**

காரைநகர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அருகாமையில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

077 161 1853

077 043 9822

(CS/59301) J-1

**காணி விற்பனைக்கு**

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 794 8012

**கிரியைகள் செய்து தரப்படும்**

கீரிமலை அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் சாந்திகள், சபிண்டீகரண கிரியைகள் செய்து தரப்படும்.

நகுல உமா குருக்கள் (கீரிமலை ஐயா)

தொடர்பு:- 077 049 8438

(CS/59267) J-1

**காணி உடனடி விற்பனைக்கு**

இராமநாதன் வீதியில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில் காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்

தொடர்பு: 077 723 5740

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஸாவில் இஸ்ரேல் தாண்டவம்

காஸாவில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 55 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று பலஸ்தீன போர்க் கண்காணிப்பகம் அறிக்கையிட்டுள்ளது. (ம)

## பலி 2,600

ஆப்கானிஸ்தானின் இந்துகுஸ் பிராந்தியத்தில், அண்மையில் ஏற்பட்ட இரட்டை நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,400ஆக அதிகரித்துள்ளது. (ம)

**PK REAL ESTATES**
**வீடுகள், காணிகள் விற்பனைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, மானிப்பாய், குருநகர், சுன்னாகம், மல்லாகம், K.K.S Road ஆகிய இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்கு தேவை. மற்றும் யாழில் கடைகள் மற்றும் விடுதிகள் விற்பனைக்கு தேவை.

Owner of the Company :- +44 7481 304127
Tel :- +71 010 0002,021 222 1813
Mail :- acistoonline@gmail.com
Address :- 4/1, Senguntha market, Kalviyankadu, Jaffna.
website:- www.acisto.online

**காணி விற்பனைக்கு**

நாவற்குளி புகையிரத நிலையத்திலருந்து 100m தூரத்தில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
**076 330 9761**

**Spoken English & Grammar Classes**
Grade 7 to பட்டதாரிகள்
International School Students
K.Ganesh B.A (UOP)
யாழ் கந்தர்மடம்
**077 766 8725**

**பெண் வேலையாள் தேவை**

சமையல் தெரிந்த பெண் தங்கியிருந்து வேலை செய்வதற்கு தகுந்த பெண் வேலையாள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் இலவசம்.
**077 196 6541, 077 396 5382**

**கணிதம்**

யாழ் நகரில் தரம் 06 -11 வரை சிறந்த முறையில் கற்பிக்கப்படும். தனியாகவும் குழுவாகவும்
தொடர்பு: **077 085 6412**

**வீட்டுப் பணிப்பெண்கள் தேவை**

நீர்வேலியில் வீட்டுப்பணிப்பெண்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**074 292 5923**

**elanka**
**MEGA Sale**
இலங்கையில் மிக குறைந்த விலையில்
இலங்கையின் மிகப்பெரிய காலணி கண்காட்சி
பாதணிகள்
பைகள்
பாதணிகள் பைகள்
செப்டம்பர்
05 முதல் | 23 வரை
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்
076 148 7000

# மரண அறிவித்தல்



## குவேந்திரநாதன் ரஞ்சினிதேவி

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குவேந்திரநாதன் ரஞ்சினிதேவி (ரஞ்சினி) அவர்கள் நேற்று (06.09.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், குவேந்திரநாதன் (ராஜா பிளாசா) அவர்களின் அன்பு மனைவியும், கியெந்தி (முன்னாள் உதவி விரிவுரையாளர், விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), Dr.சுமன் (முன்னாள் வைத்திய அதிகாரி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஷயந்தினி (முன்னாள் மக்கள் வங்கி அதிகாரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.ஷேத்திரபாலன் (இயக்குநர், அட்லான்டா வைத்தியசாலை), பிரவீனா (முன்னாள் விரிவுரையாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்), ஜீவபிரதாப் (தேசிய சேமிப்பு வங்கி அதிகாரி, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பத்மாவதி, மகாலிங்கம், சாரதாதேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற சுலோசனாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிஷேன், நிஷ்மிகா, ஜிதேஷ், நிருஷ், சாருஷி, ஜஸ்விந்தன், நிருஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 09.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 09.04.1963 — மறைவு 06.09.2025

இல. 74, ராஜா பிளாசா,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு

தகவல்:
குடும்பத்தினர்
077 615 9631
077 310 0983

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

சொந்தத்தின் வீட்டுக்கு வீழ்ந்தவரைப் பாரத்திடவே
வந்தாரே வேகமான வாகனத்தில் —வந்தாரே
நன்றான வீட்டினுள்ளே நில்லாத வேகத்தால்
நின்றாரே கூரையது மீது...

பொன்.சுகந்தன்


A

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை (07.09.2025) சிகரம் :155

# தையிட்டி; மயிலிட்டி; கச்சதீவு; செம்மணி

நிலாந்தன்

"நாங்கள் கேட்டது சர்வதேச விசாரணையை. அநுர தருவது சர்வதேச விளையாட்டு மைதானத்தை". என்று முகநூலில் ஒரு பதிவு காணப்பட்டது. தமிழ் மக்கள் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கமோ "இதோ உங்களுக்கு விளையாட்டு மைதானம்; இதோ உங்களுக்கு மயிலிட்டித் துறைமுகம்; இதோ உங்களுக்கு வட்டுவாகல் பாலம்" என்றிவ்வாறாக அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்கின்றது.



அநுர ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இந்த மாதத்தோடு ஓராண்டு முடிகிறது. பதவியேற்ற ஓராண்டு காலப் பகுதிக்குள் வடக்கிற்கு அதிக தடவைகள் வருகை தந்த ஒரே ஜனாதிபதியாக அவர் காணப்படுகிறார். கடந்த கிழமை அவர் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களையும் தொடக்கி வைத்துள்ளார். இடையில் ஒரு சாகசப் பயணமாக கச்சதீவுக்கும் போய் வந்திருக்கிறார்.

கடந்த ஓராண்டு காலப் பகுதியில் வடபகுதிக்கு மட்டும் 1250 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் முல்லைத்தீவில் வைத்துச் சொன்னார். கடந்த கிழமை வடக்கில் அவர் மண்டைதீவில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல்லை நாட்டினார். மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திக்கான வேலைகளையும் தொடக்கி வைத்தார். யாழ். நூலகத்தை டிஜிட்டல் தளத்தில் நுகர்வதற்குரிய வேலைகளையும் தொடக்கி வைத்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு கடவுச்சீட்டு அலுவலகத்தையும் திறந்து வைத்தார். வன்னியில் தெங்கு முக்கோணத் திட்டம் ஒன்றை தொடக்கி வைத்தார். வவுனியாவில் 7 ஆண்டுகளுக்கு முன் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் இருந்த மத்திய பொருளாதாரம் மையத்தைத் திறந்து வைத்தார். முல்லைத்தீவில் வட்டுவாகல் பாலத்தைப் புதிதாகக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார். "உங்களுக்கு ஒரு சக்தி வாய்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று முல்லைத்தீவில் வைத்து அநுர கூறினார்.

அபிவிருத்தி வேண்டும். அதில் சந்தேகமில்லை. போரால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்கள் தொடர்ந்தும் அந்தப் பாதிப்பில் இருந்து விடுபடாதவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் தங்களைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தவேண்டும். எனவே அபிவிருத்தி வேண்டும்.

ஆனால் தமிழ் மக்கள் போராடியது அபிவிருத்திக்காக அல்ல. அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளுக்காகத்தான். அபிவிருத்தி என்பது ஒரு சமூகம் அதன் நோக்கு நிலையில் இருந்து செய்ய வேண்டியது. அது அதன் நோக்கு நிலையிலிருந்து அபிவிருத்தியைத் திட்டமிடுவதற்கு அவசியமான கூட்டு உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் தனது கடலின் மீதும், துறைமுகங்களின் மீதும், காட்டின் மீதும், நிலத்தின் மீதும் அதன் வளங்களின் மீதும் அதிகாரத்தைக் கொண்டிராத ஒரு மக்கள் கூட்டமானது தனக்குரிய அபிவிருத்தியைத் தானே திட்டமிட முடியாது.

அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளை உறுதிப்படுத்தாமல் அபிவிருத்தியை முன்னெடுப்பது என்பது இனப்பிரச்சினையை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக வியாக்கியானப்படுத்தும் ஓர் உத்திதான்.

எதை அபிவிருத்தி செய்வது? எப்பொழுது செய்வது? எப்படிச் செய்வது? யாரிடம் உதவி எடுப்பது? போன்ற எல்லாவற்றையும் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் தமிழ் மக்களுக்குரிய கூட்டுரிமைகள் வேண்டும். அந்தக் கூட்டுரிமைகளைக் கேட்டு அதாவது அரசியல் உரிமைகளைக் கேட்டுத்தான் - தமிழ் மக்கள் போராடினார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் வரையிலும் அதாவது தமிழ் மக்களின் கூட்டுரிமைகள் உறுதி செய்யப்படும் வரையிலும் அபிவிருத்தியைச் செய்யாமல் இருக்க முடியாது என்பதனை இந்தக் கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் தமிழ்மக்கள் தமது கூட்டுரிமைக்கான கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறதா என்ற சந்தேகம் தமிழ் மக்களிடம் எப்பொழுதும் இருக்கும். அநுர தனது யாழ்ப்பாண விஜயத்தின்போது தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு தெரியாமல் தனது நண்பர் ஒருவரின் வீட்டில், தட்டாதெருவில் தங்கியிருக்கிறார். இதற்கு முதல் முறை யாழ்ப்பாணம் வந்த பொழுது அவர் குருநகர் மத்தியூஸ் வீதியில் உள்ள க்யூடெக் அலுவலகத்துக்கு சற்று நேரே உள்ள ஒரு நண்பரின் வீட்டில்தான் இளைப்பாறி ,குளித்து உடைமாற்றிக் கொண்டு சாப்பிட்டார். கடந்த கிழமை புதுக்குடியிருப்புக்குச் சென்ற போது அங்கே தன்னுடைய கட்சிக்காக உழைக்கும் ஒருவருடைய வீட்டில் மதிய உணவை எடுத்தபின் அந்த வீட்டுக் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டு ஒரு படம் எடுத்துக் கொண்டார். பொதுவாக வடக்குக்கு வரும் ஜனாதிபதிகள் இங்குள்ள உயர்தர விடுதிகளில்தான் தங்குவார்கள். அதற்கு பாதுகாப்பு ஒரு காரணமாகக் கூறப்படும். ஆனால் அநுர தன் பழைய நண்பர்களைத் தேடிச் சென்று அவர்களுடைய வீடுகளில் தங்குகிறார்; உணவருந்துகிறார்; குளித்து உடுப்பு மாற்றிக் கொள்கிறார். சிங்கள மக்கள் மத்தியில் அவர் ஓர் எளிமையான, எளிதில் கிடைக்கக்கூடிய தலைவர் என்ற அபிப்பிராயம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்கள் மத்தியிலும் அப்படி ஒரு பிம்பத்தை கட்டியெழுப்ப அவர் முயற்சிக்கிறார்.

அவர் எந்தப் பிம்பத்தை கட்டியெழுப்பினாலும் இறுதியாக நிலைக்கப் போகும் பிம்பம் எது என்பதை இனப்பிரச்சினைக்கான அவருடைய தீர்வு எது என்பதுதான் தீர்மானிக்கப் போகிறது.

தேசிய மக்கள் சக்தி, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை அதன் தேர்தல் பிரசாரங்களிலும் அதன் தேர்தல் அறிக்கையிலும் காண முடிந்தது. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென்று ஏற்றுக்கொண்டால்தான் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்களைத் தாங்களே அபிவிருத்தி செய்யத் தேவையான கூட்டுரிமைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

உதாரணமாக மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட விரிவாக்கம். மயிலிட்டித் துறைமுகம் எனப்படுவது ஒரு காலம் இலங்கைத்தீவின் முன்னணி கடல் வாணிபத் துறைமுகமாக விளங்கியது. தமிழ் மக்கள் நீண்ட கடல் எல்லையைக் கொண்டவர்கள். போருக்கு முன்பு தீவின் மொத்தக் கடலுணவில் கிட்டத்தட்ட 40 விகிதம் வடக்கிலிருந்தே கிடைத்தது. வடக்கில் மயிலிட்டிதான் முன்னணித் துறைமுகமாகக் காணப்பட்டது. போரில் அது உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் விழுங்கப்பட்டது. விளைவாக மயிலிட்டி அதன் சோபையை, பொலிவை இழந்து விட்டது. அதன் மக்கள் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து மெலிந்து போய்விட்டார்கள். தொடர்ச்சியான இடப்பெயர்களால் ஒரு தலைமுறை அதன் பாரம்பரியத் தொழில் தொடர்ச்சியை, தொழில் திறன்களின் தொடர்ச்சியை இழந்து வருகிறது. இப்படிப்பட்டதோர் பின்னணியில் மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தியை ஜனாதிபதி தொடக்கி வைத்திருக்கிறார்.

ஆனால் மயிலிட்டி அமைந்திருக்கும் அதே பிரதேசத்தில் சில கிலோமீற்றர் தொலைவில்தான் தையிட்டி அமைந்திருக்கிறது. அங்கு கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரையானது சிங்கள பௌத்தமயமாக்கலின், நிலப் பறிப்பின் ஆகப்பிந்திய குறியீடாக நிற்கிறது. தையிட்டி விகாராதிபதி மயிலிட்டியில் நடந்த வைபவத்துக்கு வருவாராக இருந்தால் அது ஒரு விவகாரமாக மாறும் என்று கருதியதனால் அந்த வைபவத்துக்கு எந்த மதத் தலைவர்களும் அழைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் மண்டைதீவில் வைத்து அநுர தையிட்டி விகாரதிபதியிடம் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

மயிலிட்டியில் அபிவிருத்தி; தையிட்டியில் நிலப்பறிப்பும் சிங்கள பௌத்தமயமாக்கலும். இது தற்செயலான முரண்பாடு அல்ல. இவை இரண்டுமே ஒரே நோக்கத்தைக் கொண்ட அரசு இயந்திரத்தின் இரு வேறு செயற்பாடுகள்தான். ஒன்று வெளிப்படையாக ஆக்கிரமிப்பைச் செய்கின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களுடைய நிலத்தின் மீதும் கடலின் மீதும் உரிமை இல்லை என்பதனை அது நிரூபிக்கின்றது. இன்னொன்று தமிழ் மக்களை அபிவிருத்திக்குள் கரைத்து விட முயற்சிக்கின்றது. அதனால்தான் திரும்பத்திரும்பக் கூறவேண்டியிருக்கிறது, தமிழ் மக்கள் கேட்பது அபிவிருத்தியை அல்ல. அபிவிருத்தி செய்வதற்கான கூட்டுரிமைகளை என்று.

கடந்த வாரம் அநுர யாழ்ப்பாணத்தில் நின்ற அன்று செம்மணியில் ஏழு எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. செம்மணிப் புதைகுழியை உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கான ஒரு களமாக அரசாங்கம் கையாண்டு வருகிறது. புதுக்குடியிருப்பில் அநுர ஒரு சிறு பிள்ளையைத் தூக்கி வைத்துக்கொண்டு படம் எடுத்திருக்கிறார். அதுபோல ஒரு சிறு பிள்ளையை அணைத்தபடி செம்மணியில் ஒரு தாய் புதைக்கப்பட்டார். அந்தத் தாய்க்கும் குழந்தைக்கும் நீதி கிடைத்தால்தான் புதுக்குடியிருப்பில் அநுர எடுத்த படத்துக்கு ஒரு வரலாற்றுப் பெறுமதியிருக்கும். இல்லையென்றால் அது வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் எறியப்பட்டுவிடும். ஏனென்றால் "வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி" என்று மார்க்சிஸ்டுக்கள் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B

# செம்மணியும் செல்வாக்கும்!

அ.நிக்ஸன்

யாழ்ப்பாணம் செம்மணிப் பிரதேசம் தற்போது தமிழின அழிப்பின் பிரதான அடையாளமாக விளங்குகின்றது. இந்தப்பின்னணியில், முடிந்தவரை இலங்கை அரசாங்கம் 1996 ஆம் ஆண்டு செம்மணியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் பற்றிய அடையாளங்களை மூடி மறைக்கும் முயற்சிகளை திரைமறைவில் அரங்கேற்றுகிறது. ஆனாலும் ஈழத்தமிழ் தரப்பில் உள்ள சட்டத்தரணிகள், சமூகப் பிரதிநிதிகள், செய்தியாளர்கள், செம்மணி விவகாரத்தை திசை திரும்பவிடாமல் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.




2009 மே மாதம் போரின் பின்னரான சூழலில் 2010 ஆம் ஆண்டில் இருந்து வடக்கு- கிழக்கு பகுதிகளில், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இதுவரை உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை.

மன்னார் திருக்கேதீஸ்வரம் வளாகத்தில் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் எந்தக்காலத்திற்குரியவை என்பதைக் கண்டறிவதற்கான கார்பன் பரிசோதனையை மேற்கொள்வதற்கான கதிரியக்க கார்பன் காலக்கணிப்பு C14 (Carbon Dating Test) மாதிரிகள் பெறப்பட்டு தயார் நிலையில் இருந்தாலும் இதுவரை விசாரணைகள் உரிய முறையில் முடிவுறுத்தப்படவில்லை. திருக்கேதீஸ்வரம் எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 'C14 பரிசோதனைக்காக அனுப்பப்படவிருந்த நிலையில், அதற்கான நிதியைக் கோரி, ஓ.எம்.பி. எனப்படும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய விபரங்களை கண்டறியும் அலுவலகத்திடம் விலை மனுகோரப்பட்டு இருந்தது. ஆனால் அதற்கான பதில் வழங்கப்படாததால் இன்னமும் அந்த என்புத்தொகுதிகள் கார்பன் பரிசோதனை செய்யப்படாமலேயே காத்திருக்கின்றன. அதேநேரம் மன்னார் 'சதொச' கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் 2018 ஆம் ஆண்டு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 க்கும் அதிகமான எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் ஒரு பகுதி ஆய்வு செய்யவென, ஓகஸ்ட் மாதம் 2022 ஆம் ஆண்டு மன்னார் நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும் அமெரிக்காவின் மியாமி பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனம், (Beta Analytic Inc.) அந்த என்புத்தொகுதிகள் கி.பி.1404 - 1635 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்தவை என ஆய்வு அறிக்கையில் தெரிவித்திருந்தது. ஆனால் அந்த எலும்புகள் போர்க்காலத்துக்குரியவை என அகழ்வில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் ஏற்கனவே சந்தேகம் வெளியிட்டிருந்தனர். இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட சில மனித எச்சங்கள் களனி பல்கலைக்கழக பேராசிரியர் ராஜ் சோமதேவிடம் சமீபத்தில் தான் ஆய்வுக்காக கையளிக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே இன அழிப்பு என்பதை மூடி மறைக்கும் முயற்சிகள் 2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட நாளில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இவ்வாறான பின்னணியில் செம்மனி மனிதப்புதைகுழி விவகாரமும் மூடி மறைக்கப்படக் கூடிய ஆபத்துகள் இல்லாமில்லை. இந்தப் பின்புலத்தில்தான் செம்மணியில் உள்ள அரசாங்கக் காணி எனக் கருதப்படும் சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலமான அதுவும் செல்வாக்குப் பெற்ற ஓர் ஆன்மிகவாதியிடம் வழங்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு நிர்வாக அரசியல் செல்வாக்கிலேயே இந்தக் காணி பெறப்பட்டிருக்கிறது. இந்தக் காணியில் சங்கிலியன் சிலை ஒன்றும் ஆன்மிகத் தலம் ஒன்றும் அமைக்கப்படுவதற்கான யோசனைகள் இருப்பதாகவும் அறிய முடிகிறது. ஆனால் குறித்த மூன்று ஏக்கர் காணி 1996 ஆம் ஆண்டு கிருசாந்தி குமாரசுவாமி , இராணுவத்தினரால் பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடமாகும். அந்தக் காணியில் கிருசாந்தியை தேடிச் சென்ற தாயாரும், தம்பியும் அயல் வீட்டாரும் அந்த இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்று, 1999 ஆம் ஆண்டு வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில், முதலாம் எதிரியான சோமரட்ன ராஜபக்ச தனது இறுதி விருப்பத்தை நீதிபதியிடம் வெளிப்படுத்தினார். அப்போது செம்மணியில் சுமார் 600 க்கும் அதிகமான இளைஞர்களும், யுவதிகளும் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளைத் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் எனவும் கூறியிருந்தார். இந்த நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு விசாரணைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டன. இந்தச் சாட்சியத்தின் பிரகாரம், சோமரட்ணவுடன் செம்மணிக்குச் சென்றிருந்த மன்னார் மாவட்ட அப்போதைய நீதிபதி இளஞ்செழியன், மனிதப் புதைகுழிகள் இருப்பதாக காண்பித்த இடங்களை அடையாளப்படுத்தினார். இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டிருந்த காணியின் ஒரு பகுதியைத் தான் குறித்த ஆன்மிகவாதிக்கு கொழும்பு அரச அதிகாரிகள் வழங்கியிருக்கின்றனர். கிருசாந்தி உள்ளிட்ட 600 பேர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ள தாக நம்பப்படும் குறித்த மூன்று ஏக்கர் காணிக்குள் விசாரணைகள் முடிவடையும் வரை எந்தவிதமான கட்டடங்களையும் கட்ட வேண்டாம் எனக் கோரி சட்டத்தரணி சண்முகநாதன் வைஷ்ணவி , யாழ்.மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நகர்த்தல் பிரேரணை ஒன்றை கடந்த ஜூலை மாதம் 29 ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்டும் இந்த நகர்த்தல் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது.

ஆன்மிகவாதி ஒருவர் பெற்றுள்ள இந்தக் காணியில் கட்டடங்கள் கட்டப்படும் போது, அதனால் எழும் விளைவுகள் அங்குள்ள மனிதப் புதைகுழி பற்றிய விசாரணைக்குத் தடையாக இருக்கும் எனவும் நகர்த்தல் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டி ருந்தது. அதேநேரம், காணிக்கு 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனிதப்புதை குழி அகழ்வு நடவடிக்கைகளிலும் இடையூறு ஏற்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த நகர்த்தல் பிரேரணையை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் (Jurisdiction) மஜிஸ்ரேட் நீதிமன்றத்துக்கு இல்லை என்பதால், இதனை யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு நீதிபதி அறிவுறுத்தினார்.

இது பற்றி சட்டத்தரணி வைஷ்ணவியிடம் கட்டுரையாளர் வினவியபோது, குறித்த நகர்த்தல் பிரேரணையை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முறைப்பாட்டாளர்கள் எவரும் முன்வரத் தயங்குகின்றனர் எனத் தெரிவித்தார். நகர்த்தல் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சுற்றுப் புறச்சூழல் பாதுகாப்பு என்பது செம்மணியை அண்மித்த பிரதேசங்களில் ஏற்படவுள்ள வெள்ள அபாயம் பற்றியது. அதாவது இருபாலை, கல்வியங்காடு , வலிகாமம் கிழக்கின் ஒரு பகுதி, நல்லூர்ப் பிரேதச சபையின் ஒரு பகுதி, அரியாலை போன்ற மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மழைக்காலத்தில் வெள்ளம் ஏற்படும் அபாயம் உண்டு.

இந்தக்காணி வலி. கிழக்கு பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளதால், கோப்பாய் பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் கட்டுரையாளர் இது தொடர்பில் வினவினார்.

குறித்த கட்டடம் அந்தக் காணியில் அமைந்தால் வெள்ள அபாயம் ஏற்படும் என்பதை அவர் உறுதிப்படுத்தினார். அத்துடன் ஆன்மிகவாதி, அரசாங்கத்திடமிருந்து பெற்ற காணியில் கட்டடங்களை கட்டுவதற்கான அனுமதி எதனையும் இதுவரை கோப்பாய் பிரதேச சபையிடம் விண்ணப்பிக்கவில்லை என்றும் உறுதிப்படுத்தினார்.

'சித்துப்பாத்தி மயானத்தில் மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், கிருசாந்தி உள்ளிட்ட 600 பேர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக அடையாளம் இடப்பட்டுள்ள செம்மணிக் காணிக்குள், கட்டடங்கள் அமைப்பதை தற்காலிகமாக பிற்போடுங்கள்' என குறித்த ஆன்மிகவாதியிடம் தொலைபேசியில் தாழ்மையாக தான் கேட்டுக் கொண்டதாகவும் என்னிடம் எடுத்துச் சொன்னார்.

இந்த விவகாரத்தில் குறித்த ஆன்மிகவாதியிடம் மாற்றம் வரும் என்ற தான் நம்புவதாகவும் நிரோஷ் மேலும் தெரிவித்தார். அதேவேளை யாழ்ப்பாணத்தில் மழையினால் பெறப்படும் வெள்ள நீரை கடலுக்குச் செல்ல விடாமல் தொண்டைமானாறு, செம்மணி போன்ற இரண்டு பிரதேசங்களை தெரிவு செய்து பெரும் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை வடமாகாண நீர்ப்பாசன திணைக்களம் செயற்படுத்தி வருகிறது. உலக வங்கியின் 400 மில்லியன் ரூபா செலவில் செய்யப்பட்ட தொண்டைமனாறு உவர் நீர்த் தடுப்பணை வேலைத் திட்டம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவடைந்துள்ளது.

ஆனால் செம்மணித் திட்டம் இன்னும் செய்யப்படவில்லை. இவ்வாறான ஒரு நிலையில் குறித்த ஆன்மிகவாதி, செம்மணியில் தான் பெற்றுக் கொண்ட காணியில் எந்தவொரு கட்டடத்தையும் அமைக்கும் விடயத்தில் பொருத்தமான ஆலோசனைகள் பெறப்பட வேண்டும். இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சைவ மதத் தலைவர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலரும் பொருத்தமான முறையில் அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும்.

தமிழர்களின் கூட்டுரிமை சார்ந்த விவகாரங்களில் "செல்வாக்கு மிக்கவர்" "கல்வியாளர்" "புத்திஜீவி" என்ற நோக்கு நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழர்கள் ஏற்கவில்லை என்ற காரண காரியத்தோடு மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் ஒரு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இலங்கை ஒற்றையாட்சி அரசு மீளவும் பெறுகிறது. மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்ற வினா தொடர்ந்து தொக்கி நிற்கிறது. இந்தப்பின்னணியில், கொழும்பு நிர்வாக அரசியல் செல்வாக்கு என்ற அடிப்படையில் அரச காணிகளை பெற, தமிழ்த் தரப்பில் யார் ஈடுபட்டாலும் அது கூட்டுரிமை மீறலாகும். இவ்வாறான செல்வாக்குடன் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் செயற்படுவதையும் மறுக்க முடியாது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச வெளியிட்டிருந்த ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம், யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் கொழும்பை மையமாகக் கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆகவே இந்த ஆபத்துகள் பற்றி கொழும்பு நிர்வாக அரசியல் செல்வாக்கு உள்ள தமிழர்கள் உணரத் தலைப்பட வேண்டும். அதேநேரம், செம்மணியில் மாத்திரமல்ல, வேறெந்த இடங்களிலும் காணிகளைப் பெறுவது அல்லது காணிகளை இழப்பது போன்ற விவகாரங்களுக்கு இலங்கை ஒற்றையாட்சி நீதிமன்றங்களில் தமிழர்கள் நீதியை எதிர்பார்க்கவும் முடியாது. ஏனெனில் அது அரசியல் பிரச்சினை. அதைச் சட்டங்களினால் தீர்க்க முடியாது. உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை என்பதாலேயே இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரப்படுகின்றது. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் கூட தனது அறிக்கையில் இலங்கை நீதித்துறையின் நம்பகத்தன்மை அற்ற பின்னணியை சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆகவே, சிங்கள உறுப்பினர்கள் பெரும்பான்மையாக அங்கம் வகிக்கும் இலங்கை நாடாளுமன்றத்தின் ஊடாகவோ, ஒற்றையாட்சி நீதிமன்றத்தின் மூலமாகவோ தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பது பட்டறிவு.

இந்த அடிப்படையில் எழுந்ததுதான் "தமிழ்த் தேசியம்" என்ற கோட்பாடு.

இதை புரிந்து கொண்டு 2009க்குப் பின்னரான தமிழர் அரசியல் விவகாரத்தை மேலும் சிக்கலாக்கக் கூடிய பிரித்தாளும் தந்திரங்களுக்கு இடமளிக்கக்கூடாது. மக்களிடம் செல்வாக்குப் பெற்ற அரசியல் சாராத ஒருவரை முன்நிறுத்தி பின்னால் நகர்த்தப்படும் கொழும்பின் சதி அரசியலுக்குள் (Conspiracy Politics) பலியாகாமல், ஈழத்தமிழர்களின் கூட்டுரிமை என்ற வியூகத்தில் உத்திகள் வகுக்கப்படவேண்டும்.


குறிப்பாக இலங்கை நீதிமன்றங்களுக்குச் சென்று, தமிழர்கள் தமக்குள் வாக்குவாதப்படும் அவலங்கள் ஏற்படுவதையும் தவிர்க்க வேண்டும். தமிழர்களின் மரபுரிமை மற்றும் சைவ சமய மாண்புகளை, சவால்களுக்கு மத்தியில் பேணி வரும் ஒரு ஆன்மிகவாதி, அதேபோன்ற சமூகப் பொறுப்புடன் செம்மணி விடயத்திலும் செயற்படுவதற்கான ஆரோக்கியமான சூழல் உருவாக வேண்டும். உருவாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
07 செப்ரெம்பர் 2025


# நிரன்யா

ஆனந்தி



27

போரின் கவிதை

ஆழ் மனங்களில்
போர் பற்றிய வலி
நீங்கமுடியாமல்
முரண்டு பிடிக்கிறது...
எத்தனை இரவுகள்
அழுதுமுடித்தாலும்
கடத்தப்பட்டவர்
மீண்டும் வருவாரா?

யுகங்கள் கடந்தும்
கடக்காத வலிகள்
தொண்டைக்குழிக்குள் நின்று
அப்படியே அசைக்கமுடியாத
ஆழ் மனதின் துன்பங்களை
அசைபோடுகிறது...

தொலைத்தவை
திரும்பக்கிடைக்காமலே
போய் முடிந்தன ....
தொழில்நுட்ப யுகத்தில்
தேடிப்போகும்
நவீன கருவிகளும்...
மண்ணுளிப்புழுக்களாக
நெஞ்சம் துளைத்து
அழும் மனங்களும்
சொல்லிப்புரியாத துன்பத்தில்
தோய்ந்து துயரம் சுமந்து......
அழுது அழுது ...இரத்தங்கள்
கண்ணீராகிய கதைகள்
இவை எல்லாம்
பாவப்பட்ட வரலாறுகள்!

நோய் பிடித்த ஏழைகளுக்காக
சேவை செய்த என் தந்தை...
மருத்துவன் என்னும் மிடுக்கு..
ஊருக்கு ஒரு மருத்துவனாக...
எந்நேரத்திற்கும் தயாராகும் மனிதன்..

தான் பிறந்த ஊர்
போற்ற வாழ்ந்தவர்
சிறுபிள்ளைகள் எம்மை
தன் கனவுகளாக நினைத்தவர்....
குழந்தைகள் மழலை மொழியெல்லாம்
இரசிக்க முடியாத பரபரப்பான சேவை..
குண்டு விழுந்து வெடிக்கும் போதும்
விமானங்கள் சுடும் போதும்
சுயநலம் பார்க்காது
சோர்ந்து போகாது
சலிக்காது........
சாவின் விளிம்பில் நின்றும்
மருத்துவம் செய்த உத்தமன்..

தன், மனைவி,
பெண் குழந்தைகளுக்கான
வாழ்வை விட
ஊரின் வாழ்வும்
மக்கள் உயிரும் பெரிதென
காப்பாற்றக்கூடியவற்றை
காலனுடன் போராடி ...
திரும்பக்கொடுத்தவர்...
வரிசையாக வரும்
காயம்கொண்ட உடல்களை
பார்த்துப் பார்த்து
சலிப்புக்கொள்ளாத
எம் தந்தை....

அம்மாவிடம்
அனைத்தையும் பாரப்படுத்தி
கனவுகளைச் சுமந்துகொண்டு
மருத்துவ சேவையை கடவுளாக
பூசித்த மனிதன்.

அப்பா வருவாரோ
அள்ளி அணைப்பாரோ?
எனக் காத்துக்கிடந்த
எமக்கெல்லாம் ஏமாற்றம்!
இரண்டு தங்கைகளும் ...நானும்
அப்பாவின் பாசத்திற்காக
ஏங்காத நாள்களில்லை..

மின்னல், மழை, இடி அனைத்திற்கும்
பயந்து துடித்து ..
அப்பாவின் பாதுகாப்பை
தேடிய காலங்கள்......
விபரம் தெரியாதபோதே
அப்பாவைத் தொலைத்தோம்.

போராட்டத்தின் உச்சகட்டத்தில்..
நாம் சிறுபிள்ளைகளாக ...
எதுவும் தெரியாதவர்களாக..
ஒருநாள் போராளிகள்
அவசர அவசரமாக
அழைத்துச் சென்ற அப்பாவை
இன்றுவரை தேடுகின்றோம்....
தேடிக்கொண்டே இருக்கின்றோம்.

பலாத்காரமாக ......
அழைத்துச் செல்லப்பட்டவர்
பாசம் கொண்ட குடும்பத்தின் பிரிவை
தாங்கமுடியாமல்...
கண்களில் நீர் சொரிய எம்மைப்
பார்த்த அந்த நாள் .....
அந்த சிறுவயதில் மனதில்
பதிந்த அந்த வெறுமையை....
இன்றும் எம்மால்
மறக்கமுடியவில்லை.

அந்த இளம் வயதில்
கணவன் தன் முன்னே
இயக்கப் போராளிகளால்
அழைத்துச் செல்லப்படுவதை
பார்த்துக் கதறிய அம்மாவின் முகம்
இன்றும்...மகிழ்வில்லாமல்..
அப்படியே தான் இருக்கிறது.

மூன்று பெண் பிள்ளைகளையும்
கையில் பிடித்துக்கொண்டு
வாழ்வு எனும் ...கொடிய
அடர்ந்த காட்டில்....
இருளின் தனிமையில்
நடந்த எம் தாய்!
கணவனின் பிரிவு......
கனவுகள் கடந்தது...அது
எத்தனை கொடியது
என்பதை அவள் மூலம்
காலம் மிக அற்புதமாக
அவளைச் சூழ இருந்தவர்க்கு
கற்பித்து முடித்தது.

எம்மினமே....
எம்மை அழித்த வரலாறும்
அந்தக் கதைகளும்
பலருக்குத்தெரியாது...
பால்மணம் மாறாத
குழந்தைகள் முன்னே
வாழ்வின் முடிவு தெரியாமல்
வலிந்து ...அழைத்துச் செல்லப்பட்ட
அப்பாவை.....

நாற்பது வருடங்களுக்கும்
மேலாக நாம் தேடிக் களைத்தோம்.

தெரிந்த மொழி...
பழகிய மனிதர்கள்...
எதிரிகளாகி... ஓர் உறவின் உயிரை
பிரித்துப் பறித்தால் தானோ
அவர்களின் வெற்றி கனவாகிப் போனது?

எத்தனை முறை அவர்களின்
வாசல்களில் விழுந்து கதறினோம்
அலைக்கழித்து....
அவமானப்படுத்தி...
ஒரே இனத்து மனிதர்களையே
கேவலப்படுத்திய.....
விடுதலைப்போராட்டம்
தோற்றுப்போனதற்கு
எங்கள் சாபமும்..கண்ணீரும்
ஒரு காரணமாக இருக்கலாம்!

ஒரே தேசத்தின் உயிர்களுக்காக
உழைத்த ஓர் அறிவாளி
கடவுள் போல மனிதரைக் காப்பாற்றிய
கருணை உள்ளம் கொண்ட மருத்துவன்...
நாங்கள் தொலைக்கவில்லை
எங்களிடமிருந்து கடத்தப்பட்டு
எங்கள் கண்முன்னே களவாடப்பட்ட
கனவில் மட்டும்......
நாம் பேசிக்கொள்ளும் அப்பா!

அப்பா என்பது....
அழைக்க.....அழகிய வார்த்தை
இல்லாதவர்களுடன்
அந்த மொழி நிறையப் பேசியிருக்கிறது..
இருப்பவர்களுக்கு அதன் புகழை
கற்பிக்கமுடியாது...
எம்மைப்போல
தொலைத்தவர்கள் மட்டுமே
உணர்ந்து கொள்ளக்கூடிய
அழகிய தமிழ் 'அப்பா'
ஒரு போராட்டமும்
அதை நடத்தியவர்களும்....
பறித்துக்கொண்டு போன கவிதை.....!
அந்த வெற்றிடத்தை
யாராலும் நிரப்பமுடியாது....
நிகராக யாராலும் வாழவும் முடியாது!

எதற்கும் கடிந்து பேசாத அப்பா
கடினத்திலும் கசங்கிப்போகாமல்
கசப்பிலும்...சிரித்தபடி
ஏழ்மைகளை... அரவணைத்த ஒரு மனிதம்
எங்கே?.......எவ்வாறு?

யாரால்?...யாருக்கு?...எதனால்?
எதற்காக?.......
எவருக்கும் தெரியாது?

எங்கள் வாழ்வை
அந்தக் கொடூர நிகழ்வு
முழுவதும் மாற்றியது...
விடுதலைப்போராட்டத்தை
முற்றாக எதிர்த்தோம்....
போராளிகள்மீதும்
போராட்டத்தின்மீதும்
வெறுப்பும் வேதனையும்
மட்டுமே படர்ந்து வாழ்ந்தது .

எங்கள் வாழ்வை புலம் பெயர்த்தோம்
நாட்டை அடியோடு வெறுத்தோம்!
நீதியற்ற போராட்டம்
தோற்கவேண்டுமென்று
எப்போதும் பிரார்த்தித்தோம்
ஆண்டவனை வெறுத்தோம்....
மனஅமைதி தேடி
எங்கெல்லாமோ நடந்தோம்..
போராட்டம் தோற்றது ...
அப்பாவைக் கொன்றவர்களின்
ஆயுள் முடிந்ததில் மகிழ்வு.

கடல் போல தான் எடுத்ததை
காலம் திரும்பத்தரும் என்று
கனவு கண்டு
தோற்றுப்போனோம்...
வருவார் என காத்திருந்து காலங்கள்
போய் முடிந்தன...
மூன்றாம் பரம்பரையும்...
முளைத்து வலுவான எதிரியாகின..
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்
உறவுகளில்......
நாங்கள் சிரேஷ்டஉறுப்பினர்கள்
நாங்கள் தொலைத்தது....
நாற்பது வருடங்களுக்கு முன்..!
நாங்கள் தேடும் காலம் நீண்டது ...

உங்கள் எதிரிகள்,
கண்களில் படும் போதெல்லாம்
ஆரவாரங்கள் செய்து
கண்டித்து கடையடைத்து .....
நீதிக்காக நீங்கள் போராடலாம்...
நாங்கள் என்ன செய்வது ?
எம் அப்பாவைக் களவாடிய கைகள்
இன்று இல்லையே
நாம் யாரைக் கேட்பது
எம் தந்தை பற்றி......?
எமக்கான நீதியை நாம்
யாரிடம் கேட்பது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பிரச்சினைகளைத் தீர்த்து வலுவூட்ட உதவுமா அரங்கு?

## நம்பிக்கையூட்டும் 'உயிர்ப்பு'

க.ரதிதரன்

அண்மைக்காலங்களில் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கூடம் ஆக்கபூர்வமான அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கலாம். தினமும் பயிற்சிகளும், தயார்ப்படுத்தல்களும் நடந்துவருகின்றன. சிறுவர் அரங்கு, விசேட தேவையுள்ள சிறுவருக்கான அரங்கு, தெருவெளி அரங்கப் பண்புகொண்ட சமுதாய அரங்கு, முதியோர் அரங்கு, கொண்டாட்ட அரங்கு, கல்வியியல் அரங்கு, ஆற்றுப்படுத்தல் அரங்கு, பிரயோக அரங்கு மற்றும் அரங்கியல், பண்பாடு, மரபிசை அரசியல் போன்ற பல்வேறு கலந்துரையாடல்களும் அங்கு நடந்து வருகின்றன. அண்மையில் கோயில் திருவிழா வாணவேடிக்கையின் விளைவாக இந்தக் கூடத்தின் கொட்டகையின் பெரும் பகுதி எரிந்து நாசமாகியது. எனினும் விடாமுயற்சியோடு மீண்டும் தொடங்கும் மிடுக்காக அந்தக்கூடத்தின் இரண்டாவது ஆற்றுகை உயிர்ப்பாகியது.

அந்த வகையில் 24.08.2025 ஞாயிறன்று மாலையில் நடைபெற்ற 'உயிர்ப்பு'என்ற ஆற்றுகையானது வழமையான மேடைநாடகங்கள் போலல்லாது ஓர் ஒன்றுகூடல்போல ஆரம்பித்து சடங்கு, இசை, தாள அசைவு, பாடல், ஆற்றுகை, கலந்துரையாடல் எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்டிருந்த கொண்டாட்ட நிகழ்வு போல அமைந்திருந்தது. அதனால் நாடகம் என்பதைக்காட்டிலும் அதனை ஒரு கொண்டாட்ட ஆற்றுகை என்றே குறிப்பிட வேண்டும். வேப்பிலை, மலர்மாலை, பட்டுத்துணி என்பவற்றால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கம்பமும் அதன் அருகே வாழை மரங்கள் நடப்பட்டும் இருந்தன. ஒரு சடங்கு வழிபாடு போல தீபங்களோடு மலர்தூவி அஞ்சலி வணக்கத்தை, வந்திருந்த மக்கள் அல்லது பார்வையாளர்கள் அல்லது பங்குபற்றுனர் மேற்கொண்டனர்.

அந்த அஞ்சலி வணக்கத்தின்போது மட்டக்களப்பில் பாடப்படும் நாட்டுப்பாடலான இராவணேஸ்வரனை மையப்படுத்திய பாடலைக் கிரிதரன் பாடினார். அந்தப் பாடல் மிகுந்த உணர்வோடும் சிதறிப்போன ஒரு சமூகத்துக்கு நம்பிக்கையூட்டுமாறும் பாடப்பட்டது. அது சமயப்பாடல் போல இருந்தாலும் உண்மையில் அது ஓர் இனத்துக்கான பொதுப்பாடலாக இருந்தது. அந்தப் பாடல் நல்லதொரு உணர்வினை நாட்டுச்சூழலோடு தோற்றுவித்தது. ஓர் இனத்திற்கான ஆன்மிக பாடல்போல அது அமைந்திருந்தது.

பின்னர் பொய்க்கால் கட்டிய உயரமான ஆட்களின் நடையும், இசையசைவும் நடைபெற்றது. நாட்டார் பாடல் போன்ற நாட்டுப் பாடல்கள், நாடகப்பாடல்கள் இடையிடையே நடைபெற்றன. அந்தப்பாடல்கள் மக்களிற்கு நம்பிக்கை ஊட்டும்வகையில் உணர்ச்சி மிகுந்ததாக இருந்தன. பல்வேறுபட்ட பறைகளும், தப்பும், நவீன இசையும் கலந்து பாடல்கள் விறுவிறுப்பாக பாடப்பட்டன. ஆசிரியர் ரதி, கிரிதரன் போன்றோர் பாட பலர் பின்னணியில் பாடினர். பாடல்களின்போது ஆடலசைவும் கலந்து காணப்பட்டது. சலிப்பின்றிப் பார்ப்பதற்கு ஏற்றவகையில் அவை அமைந்திருந்தன. இசையாற்றுகையோடு அங்கு ஒரு நாடகம்சார் ஆற்றுகையும் நடந்தது. அந்த ஆற்றுகையில் இரண்டு குழுக்களாக ஆற்றுவோர் செயற்பட்டனர்.

ஒரு குழுவினர் கல்வியறிவுள்ள உயர்ந்தோர் போலச் செயற்பட்டனர். அவர்களது தோற்றம் ஊதிப்பெருத்த உடல்வாகு கொண்டவர்களாக இருந்ததோடு அவர்களது அறிவு உடலெங்கும் பரவி வீங்கி வெளிப்பட்டது. அந்தக் குழுவினர் அறிவுதான் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் என்பது போலவும் அடுத்த சந்ததியும் அதேபோலவே செயற்படவேண்டும் என்பது போலவும் கருத்துகளை தெரிவித்ததோடு இன்றைய வர்த்தக உலகின் ஏகபோகங்களை அனுபவிக்கத் தவறக்கூடாது என்பதுமாகக் காணப்பட்டனர். அவர்களது ஆற்றுகையின் இடையில் அதன் இயக்குநர்/ உரையாளர் சிதம்பரநாதன் குறுக்கீடு செய்து சில கருத்துகளைத் தெரிவித்தார். சிதம்பரநாதனின் கருத்துப்படி கல்விக்குத் தாம் எதிரானவர்கள் அல்லர் என்றும் ஆனால் அந்தக் கல்வி எமது மக்களின் வாழ்விற்கான கல்வியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியதோடு அதில் ஆற்றுகை செய்தவர்களும் ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் எனப் பலர் இருப்பதையும் சுட்டிக்காட்டினார். இதில் பங்கேற்ற ஆற்றுவோர் இரண்டு விதமாகச் செயற்பட்டனர். பாத்திரங்களைப்போல நிகழ்த்திக்காட்டிவிட்டு பின்னர் சுயமாகவும் தமது பாத்திரச் செயற்பாடுகள் பற்றி தாமே கருத்துகளையும் தெரிவித்தனர். அதாவது வேடஉடுப்பு அணிந்த சொந்தப் பெயருடன் பேசினர்,

இரண்டாவது குழுவானது நவநாகரிகம், ஆடம்பர மோகம், மேற்கத்தேய பண்பாடு, உணவுப் பழக்கம் கொண்டவர்களாகச் செயற்பட்டனர். இன்று சர்வதேச வர்த்தகக் கம்பனிகள் புதிய பழக்கவழக்கங்களைப் பின்தொடர்வதாகக் காட்டப்பட்டதோடு எமது சுயாதீனம், பண்பாடு, உணவு, பாரம்பரியம் எவ்வாறு பாதுக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்.

இந்த ஆற்றுகையில் நிகழ்த்துவோரும் உரையாளரும் (நெறியாளர்) பேசும் அதேநேரம் பார்வையாளரையும் பேசுவதற்கான சூழலும் ஏற்படுத்தப்பட்டது. பலர் கருத்தை ஆற்றுகையில் தெரிவிக்காவிட்டாலும் மனதளவில் பங்கேற்றது இங்கு குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டும். இது முதல் ஆற்றுகை என்பதால் சிறிது தயக்கம் இருந்தது. எனினும் அடுத்த ஆற்றுகைகளில் பார்ப்போர் பங்கேற்பு அதிகரிக்கும்.

ஆயுதப்போராட்டம் நிறுத்தப்பட்ட பின்னர் நம்பிக்கை இழந்து சிதறிய சமூகத்தை ஒருங்கிணைக்கவும் நம்பிக்கையூட்டவும், ஆதிக்க மற்றும் வர்த்தக உலகில் இருந்து எமது பண்பாட்டைப் பாதுகாக்கவும், விழிப்புணர்வு ஏற்படவும், கல்வித்துறையில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்களையும் இந்த ஆற்றுகை பேச முனைந்தது.

இதன் இயக்குநர் சிதம்பரநாதன் இதை ஒரு கதையாடல் அரங்கு அல்லது நிகழ்வு என்று குறிப்பிடுகிறார். இந்த ஆற்றுகையானது நாடகம் என்கின்ற எண்ணக் கருத்தில் இருந்து வேறுபட்டதாகவே அமைந்திருந்தது. இங்கு ஆரம்பம், உச்சம், முடிவு என்று எதுவுமில்லை. வழமையான நாடகங்கள் போல் ஒத்திகை பார்த்து, அமைப்பாக்கம் செய்வது என்பதைக் காட்டிலும் தயார்ப்படுத்தப்பட்ட நிகழ்வாகவே கொள்ளப்படுகிறது. அவரது கருத்துப்படி எதையுமே நிர்ணயிக்காது தீர்மானங்களை ஒரு விளையாட்டுப்போல் ஒவ்வொரு ஆற்றுவோனும் நிகழ்த்திக் காட்டுவதாகவே அளிக்கை செய்யப்பட்டது என்கிறார்.

பொதுவாக கலைகளின் உருவாக்கம் உணர்வுகள், உணர்ச்சிகளோடு தொடர்புபட்டிருக்கும் அதில் நாடகங்கள் கதைசார்ந்து உணர்ச்சிகளை உருவாக்கும். அதனால்தான் பார்ப்போர் தொடர்ந்தும் ஆற்றுகைக்கு ஈர்க்கப்படுகின்றனர். ஆனால் இவரது ஆற்றுகையில் உணர்ச்சிகள் கதையோட்டத்தை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்படுவதில்லை மாறாக சடங்காலும், பாடலாலும், இசையாலும், காண்பியங்கள் மற்றும் வேடமுகங்களாலும் சம்பவங்களை நிகழ்த்திக் காட்டுவதன் மூலம் சிரிப்பும், கோபமும், பயமும், பதற்றமும், சிந்திப்பும், பங்கேற்பும் உருவாக்கப்படுகின்றன.

இந்த ஆற்றுகையில் குஞ்சு குருமன் தொடக்கம் ஓய்வூதியர் வரை பங்கேற்றது ஒரு சிறப்பிற்குரிய விடயமாகும். நாடகப் பயற்சிகளில் பங்கேற்கவும் ஆற்றுகைகளைச் செய்வதற்கும் இன்றைய இளைஞர் சமூகம் ஆர்வத்தோடு ஈடுபடாமல் இருப்பதும் அவர்களது ஆர்வம் வெவ்வேறு திசைகளில் மாறியிருப்பதையும் அண்மைக்காலங்களில் அவதானிக்கலாம். அரசியல் பாரபட்சங்கள், பொருளாதார நெருக்கடிகள், சமூகவிரோதச் செயற்பாடுகள், பண்பாட்டுப் பிறழ்வுகள் போன்ற பல பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டறிவதற்கான கதையாடல் களத்தை அல்லது பொதுவெளியை உருவாக்க நாடகவடிவங்கள் பெரும் பங்களிப்பைச் செய்யும் என்பது கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இந்தப் பிரச்சினையும் நாடக ஆற்றுகையின் மூலமே தீர்த்துவைக்கப்படவேண்டும். அதாவது இந்த ஆற்றுகை அரசியல் சமூகப்பிரச்சினைகளை அவதானமாகக் கையாண்டதுபோல இளைஞர்களை வசீகரிக்கும் அம்சங்களையும் உள்வாங்கவேண்டும். அதற்கு நல்ல உதாரணம், சில திரைப்படங்களின் முதற்காட்சிக்கு இளைஞர் கூட்டம் நிரம்பிவழிவது. நாடகங்களுக்குப் பார்வையாளர் நிரம்பி வழிந்த வரலாறு எமக்குண்டு. முன்னர் பல்கலைக்கழக மாணவர்கள் அரங்கச்செயற்பாடுகளில் அதிகம் ஈடுபடக்கூடியவாறு கல்வி விதானம் இடமளித்தது. சிதம்பரநாதனின் கடந்தகால பல ஆற்றுகைகளில் பல்கலைமாணவரின் பங்களிப்பு பெருமளவில் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த ஆற்றுகையில் பல நாடகக் குழுக்கள், நாடக ஆசிரியர்கள், திரைப்படத் துறையினர், இசைக்குழுவினர், சமூகவலைத்தளச் செயற்பாட்டாளர்கள் எனப் பல பகுதியினரின் பங்களிப்போடே கூட்டுருவாக்கம் பெற்றது. குறிப்பாக நாடக ஆசிரியர் கணேசராசாவும் அவரது சண் நாடகக்குழுவும், நாடகப் பட்டம்பெற்ற விஜியருபன், சிவகுமார், சந்திரஹாசன், ஆசிரியர் நீசன், ஓய்வுபெற்ற மதுவரிப் பரிசோதகர் கிருபாகரன், ஓய்வுபெற்ற ஆசிரிய மற்றும் திணைக்கள அதிகாரிகளான விந்தன், விமலநாதன், இராதகிருஷ்ணன் (காண்பிய வடிவமைப்பு) மற்றும் கூடத்தின் நிரந்தர அங்கத்தவர்களென இருபதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

வழமையான மேடை நாடகப்பாணியை எதிர்பார்த்து வந்தவர்களுக்கு இது ஏமாற்றமாக இருந்தாலும் சலிப்பாக இருக்கவில்லை. எனினும் புலம்பெயர்ந்தோர் மற்றும் சாதாரண பார்வையாளருக்கு இந்த ஆற்றுகை பிடித்திருந்ததை அவர்களுடன் பேசியபோது தெரியவந்தது. சிதம்பரநாதனின் 'மண் சுமந்த மேனியர், 'உயிர்த்த மனிதர் கூத்து', 'பொய்க்கால்', 'நாமிருக்கும் நாடு நமது' போன்ற நாடகங்கள் முறைப்படி ஒத்திகை பார்த்து நேர்த்தியாகச் செய்யப்பட்ட ஆற்றுகை வடிவங்களாகும். எனினும் அவரது அண்மைக்கால ஆற்றுகைகள் ஒரு புதிய போக்கில் பரீட்சார்த்தப் பண்பு கொண்டவையாக, பார்வையாளரும் பங்குகொள்ளும்வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் மௌனகுரு போன்றவர்கள் கூத்துக்களை அடிப்படையாகக்கொண்டு ஈழத்துத் தமிழ் அரங்கை உருவாக்கும் முயற்சிகளை ஒருபுறம் மேற்கொண்டிருக்க, சிதம்பரநாதன் ஈழத்தமிழர் சடங்குகளைப்பற்றி ஆழமாக ஆராய்ச்சி செய்து, மேற்கத்தைய முறைகளையும் பரிசீலித்து பண்பாட்டை அடியொற்றிய தமிழ் அரங்கப் போக்கை உருவாக்குவதில் பெரும்பங்காற்றி வருகிறார். அவரது ஆற்றுகை உருவாக்கப் படிமுறை தனித்துவமானது . அதாவது உருவாக்கப்படும் ஒன்று தன்பாட்டில் உருண்டோடி தன்னளவில் அது ஒரு முழுமையைப் பெற்றுக்கொள்ளும் முறைமையாகும். இந்த முதாலாவது ஆற்றுகையின் மதிப்பீடுகளை உள்வாங்கி அடுத்தடுத்த ஆற்றுகைகள் விரிவடைந்து பெரியதொரு ஆற்றுகைக்கு வழிகோலும் என்பது சிதம்பரநாதனின் நம்பிக்கையாகும். சர்வதேச மட்டத்தில் ஈழத்தமிழ் நவீன அரங்கப்போக்குகளை ஆய்வுரீதியாக முன்னிலைப்படுத்தும்போது சிதம்பரநாதனின் அரங்கக்கோட்பாடும் அளிக்கைமுறைகளும் பண்பாட்டுச்சுயாதீனமும் சுயவாக்கமும் தனித்துவ அடையாளங்களாக சர்வதேசத்தைத் திரும்பிப்பார்க்க வைத்தன. அப்படி இப்போது உயிர்ப்பு எனும் பெயருடன் முகிழ்ந்துள்ள கொண்டாட்ட ஆற்றுகையும்,எமது பண்பாட்டின் வேரிலிருந்து தளைத்த சுயவாக்க அரங்கவடிவாக நிலைபெற சாத்தியங்கள் அதிகமுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

மன்னவன் தன்ர வளவுக்குள்ளை கட்டின கல்வீட்டுக்கு முன்னால ஒரு சிறு குடிலும் போட்டுவைச்சிருந்தார். ஆர் அவரிட்ட போனாலும் அந்தச் சிறுகுடிலுக்கை இருந்துதான் கதைக்கிறது. நீங்களெல்லாரும் கல்லடி வேலனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். முந்தின அஞ்சாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில "கொண்டாடினான் ஒடியற்கூழ்" எண்ட தலைப்பில் 'கல்லடிவேலன்' எண்ட கல்லடி வேலுப்பிள்ளையைப் பற்றிய ஒரு பாடமுமிருந்தது. அந்தக் கல்லடி வேலுப்பிள்ளையின்ர இன்னொரு வேர்சன்தான் இந்த மன்னவன் கந்தப்பு. அவர் பள்ளிக்கூடத்திலதான் வெள்ளைவேட்டி நெஷனலோடு திரிவார். வெளியே வெறும் மேலோடு தோளில் ஒரு சவுக்கத்தைப் போட்டுக்கொண்டு மடித்துக்கட்டிய சாறத்தோடு ஒரு லேடிஸ் சைக்கிளில் போய் வருவதை நான் பல தடவைகள் பின்னேரங்களில் கண்டிருக்கிறேன்

ஒரு வாசகத்திற்கும் உருகாதார் திருவாசகத்திற்கு உருகுவார் எண்டதைப் போல 'ஒரு புலம்பலுக்கும் உருகாதார் மன்னவனின் புலம்பலுக்கு உருகுவார்' எண்டு இப்பவும் சில பழைய ஆக்கள் சொல்லுவினம். அதால அப்ப அந்தியேட்டிக்குப் புலம்பல் எழுதிறதுக்கு ஊராக்கள் முழுக்க மன்னவனிட்டத்தான் போவினம். எவ்வளவு காசு சிலவழிச்சு அந்தியேட்டி செய்தாலும் மன்னவன் அதுக்குப் புலம்பல் எழுதினாத்தான் அது முழுமையடையும் எண்ட மனநிலையோடதான் அப்ப ஊராக்கள் இருந்தவை. குறிப்பா மன்னவன் புலம்பல் எழுதினாத்தான் செத்தவற்ற ஆன்மா சாந்தியடையும் எண்டு நம்பினவையும் இருந்தவை.

44

அந்தளவுக்கு மன்னவன் புலம்பல் 'ஸ்பெஷலிஸ்றா' இருந்தவர். அந்தளவுக்கு அவர் எழுதிற புலம்பலெல்லாம் எதுகை மோனையோட சிலேடையும் தூக்கலாயிருக்கும். இயல்பாகவே அவருக்கந்த 'ரலெண்ற்' இருந்தது. மன்னவன் ஆர் வீடு தேடிப் போய்ப் புலம்பல் எழுதித் தரச் சொல்லிக் கேட்டாலும் மறுக்காமல் சொன்ன திகதிக்கு எழுதிக் குடுத்திடுவார். அதுக்கெல்லாம் அவர் ஒரு சதக் காசும் வாங்கிறேல்ல. ஆனால் இப்ப புலம்பல் எழுதிற கவிவேந்தர்களும் வித்துவான்களும் எக்கச்சக்கமாக் காசு வாங்கிறதாகக் கேள்வி.

ம்... அது போகட்டும், நாங்கள் இப்ப விசயத்துக்கு வருவம். மன்னவன் சிலேடையில கதைக்கிறதிலயும் வலுவிண்ணன் எண்டு சொல்லியிருக்கிறனெல்லோ. இதைப் பற்றி பலரும் பலவிதமாச் சொல்லியிருக்கினம். இப்ப நான் கேள்விப்பட்ட சில விசயங்களை உங்களுக்குச் சொல்லுறன் கேளுங்கோ! மன்னவன் அஞ்சாம் வகுப்பு ஸ்கொலஷிப் வகுப்புக்குப் படிப்பிக்கிறதிலயும் வலுகெட்டிக்காரன். அவர் மாணிக்கவாசகர் பள்ளிக்கூடத்தில பிரின்ஸிப்பலா வாறதுக்கு முதல் ஸ்கொலஷிப் வகுப்புக்குத்தான் பாடமெடுத்தவர். அப்ப ஒருநாள் ஸ்கூலுக்கு வரக் கொஞ்சம் பிந்திப்போனார்.

வாத்திமார் வகுப்புக்கு வரப் பிந்தினால் பொடியளுக்கு வலு கொண்டாட்டந்தானே! அண்டைக்கும் அப்பிடித்தான் மன்னவன் பிந்தினாப்போல வகுப்புக்குள்ள பொடியள் குதியங் குத்தத் தொடங்கிட்டாங்கள். பிரின்ஸிப்பல் வந்து இரண்டு மூண்டு பேருக்குச் சாத்துப்படி குடுத்திட்டு "ஆரடா உங்களுக்குப் பாடம்?" எண்டு கேட்டிருக்கிறார். பொடியளெல்லாம் கோரஸா "மன்னவன் சேர்!" எண்டிருக்கிறாங்கள். அதுக்கிடையில் மன்னவனும் வகுப்படிக்கு வந்திட்டார். அவரைக் கண்டவுடன பிரின்ஸிப்பல் கடுப்பாகி "அப்ப மன்னவன் உப்பிடி வந்தால் சிலபஸ் என்னமாதிரி?" எண்டு மன்னவனிட்டக் கேட்டிருக்கிறார். அதுக்கு மன்னவன், "ஓம் சேர்! சிலபஸ் யாழ்ப்பாணம் போகுது! சிலபஸ் கொடிகாமம் போகுது! நான் சைக்கிளில பள்ளிக்கூடம் வாறன்!" எண்டு சொல்ல வகுப்பே 'கொல்'லென்று சிரித்தது.

(தொடரும்)

# அறிந்தும் அறியாமலும்

எம்.முபாறக்



## ரணிலின் முதலிரவு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை ரணிலுக்கு புது அனுபவமாக இருந்தது. அவர் தனி அறையில் அடைக்கப்பட்டார். கழிவறை வசதிகள் சரியாக இல்லாததால் கடும் சிரமப்பட்டார். அவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படும்வரை எதுவும் சாப்பிடவில்லை. எதுவும் அருந்தவில்லை.

இதனால் அவருக்குக் கடும் பசி. வீட்டில் இருந்து அவருக்கு உணவு அனுப்பப்பட்டபோதிலும் அது அங்கு சுற்றி இங்கு சுற்றி ரணிலின் கைக்குப் போய்ச் சேர்வதற்கு இரவு ஒரு மணியாகிவிட்டதாம். இருந்தாலும் கடும் பசி காரணமாக அந்த நேரத்தில் அவர் சாப்பிட்டுமுடித்தார். புது இடம். முன்பின் அனுபவமில்லை. போதிய வசதிகள் இல்லை. இதனால் அன்றிரவு அவர் சரியாகத் தூங்கவில்லை. அதனாலேயே அவருக்கு வருத்தம் கூடி, மருத்துவமனையில் சேர்க்கவேண்டிய நிலை வந்ததாம்.

## சஜித்தின் பெருந்தன்மை



ரணில் கைதுசெய்யப்பட்டபோது சஜித் பிரேமதாஸ சிங்கப்பூரில் இருந்திருக்கிறார். ஆனாலும் ரணில் கைதுசெய்யப்பட செய்தி கேட்டதும் உடனடியாக தனது பயணத்தை இரத்துச்செய்துவிட்டு சஜித், இலங்கை நோக்கி விமானம் ஏறினார். அவர் சிங்கப்பூர் விமான நிலையத்தில் இருக்கும்போதே ரணிலின் கைதுக்கு எதிராக சமூக ஊடகத்தில் செய்தி ஒன்றைப் பதிவு செய்தார். அதைச் செய்துவிட்டுத்தான் விமானமேறினார். இங்கு வந்து உடனடியாக சிறைக்குச் சென்று ரணிலையும் சந்தித்துப் பேசினார். சஜித்தின் அரசியல் வாழ்க்கையில் பெரும் சவாலாக இருப்பது ரணில்தான். சஜித் தனிக்கட்சி தொடங்கியதில் இருந்து சஜித்தைத் தோற்கடிக்கும் வேலையில்தான் ரணில் தீவிரமாக இறங்கினார். அதனால்தான் சஜித் ரணிலுடன் இணைவதைத் தவிர்த்து வந்தார். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் அதையெல்லாம் கணக்கில் எடுக்காது ரணிலுக்காக சஜித் களமிறங்கினார். இதனால் சஜித் தனது பெருந்தன்மையைக் காட்டியுள்ளார் என்று புகழ்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

## விடுதலை செய்யப் போராடுங்கள்

சஜித்தும் ரணிலும் சிறைக்குள் சிறிது நேரம் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ரணில் சஜித்தின் உதவியை நாடினார். 'என்னை வெளியே கொண்டு வரும் போராட்டத்தை நீங்கள்தான் தலைமையேற்று நடத்த வேண்டும்.

அரசின் இந்த அடக்குமுறையை வெளியில் கொண்டுவரவேண்டும்' என்று ரணில் சஜித்திடம் உதவி கேட்டார். சஜித் அவற்றைச் செய்வதாக உறுதியளித்தார். உறுதியளித்ததோடு மாத்திரம் நின்றுவிடாது ரணிலின் விடுதலைக்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்தாராம்.



## மோடி பேசியது உண்மையா ?

ரணிலை விடுதலை செய்யுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் பேசினார் என்று செய்தி ஒன்று அப்போது உலாவியது. இது தொடர்பில் பலர் ஜனாதிபதியைத் தொடர்புகொண்டு வினவினர். இதைக் கேட்டு சிரித்த ஜனாதிபதி, மோடி அல்ல ரணிலின் நண்பர்கள்கூட என்னோடு இது தொடர்பில் பேசவில்லை என்று கூறியுள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜரூபன் கஜானி
(கொக்குவில்)

# வரம்



ஆலயமணி ஒலி, நிசப்தத்தை விலக்கி 'யாமிருக்க பயமேன்' என்று மீண்டும் மீண்டும் அவள் காதில் இறைவன் கூறும் வேதம்.

ஆனால் அவளோ 'உனையின்றி வேறு கதியில்லை' என்றுதான் இப்போது எல்லாம் கோயில் போவதுண்டு. கீரத்திகா . அதுதான் அவள் பெயர்.

கொஞ்சம் குறும்புக்காரிதான். ஆனால் குற்றமற்றவள். அடுத்தவர் தன்னைக் குறைகூறாவண்ணம் பத்திரப் படுத்திக்கொள்ளும் பக்குவம் கொண்டவள். தன்னால் யார் வாழ்விலும் கஷ்டம் வந்து விடக்கூடாது என்பதில் அதிக கவனம் கொண்டவள். ஆனால் இப்போதோ 'நான் ஏன் எல்லோருக்கும்

துன்பம் கொடுக்கிறேன்? என் உறவுகளின் எதிர்பார்ப்புளுக்கு என்ன பதில் சொல்வது ? இறைவன் ஏன் எனக்கு இப்படியொரு துன்பத்தைத் தந்து விட்டான்?' என மூலவர் சந்நிதியில் அவள் அழுகை.

'கீர்த்தி நீ ஒண்டுக்கும் யோசிக்காதை, அம்மாளாச்சி எல்லாம் தருவா வாற வெள்ளி நைனாதீவுக்கு வந்து ஒரு தொட்டிலும் பிள்ளையும் வாங்கிக் கட்டு. ஐயா சொல்றன், வாற வருசம் ஒரு முருகனோட நீ இங்க வருவாய், பூசைச் செலவு எவ்வளவு எண்டு நான் கோயில்ல கதைச்சிட்டுப் போன் பண்றன்'

ஐயரின் வார்த்தைகள் கடவுளின் குரலாக ஒலித்தன.

' ஓம் ஐயா இதோட எத்தின கோயில்? எத்தின பரிகாரம்? ஆனா; பிள்ளை இல்லை என்ற வேதினைய விட இதைச் சாட்டி அந்தக் கோயில்ல இந்தக் கோயில்ல பரிகாரம், பூசை எண்டு எத்தினை இலட்சத்தைக் குடுத்துட்டன்' அழுகையூடே அவள் வார்த்தைகள் வெடித்தன.

'நீ இந்த முறை நாகம்மாளாச்சியை நம்பு' ஐயர் நம்பிக்கையோடு சொன்னார்.

தரிசனம் முடித்து யார் பேச்சுக்கும் செவி சாய்க்காதவளாக கீர்த்தி வீடு நோக்கிப் புறப்பட்டாள். யாரிடமும் பேச மனமில்லை. தன்னைத் தானே தனிமைப் படுத்திக் கொண்ட விரக்தி நிலை. கணவரின் அரவணைப்பும் இன்றி தூர விலகி நிற்கின்றாள். தனிமை, விரக்தி, விலகல் எல்லாம் நிரந்தரம் இல்லை . என்றோ ஒரு நாள் தன்னிலை மாற்றம் அடையும். தான் கேட்ட பெரு வரம் கையில் வரும் எனத் திடமான நம்பிக்கை ஆனால் அந்த நாள் எப்போது என்பதுதான் புரியாமல் நிற்கின்றாள்.

'கீர்த்தி இப்பிடியே எதுக்கொடுத்தாலும் புருசனோட சண்டை எல்லாரோடையும் சண்டை, பைத்தியம் மாதிரி திரியிறாய். உலகத்தில புதிசா உனக்கு மட்டும் இப்பிடி இல்லை. பத்துப் பதினைஞ்சு வருசம் கழிச்சுக்கூட எந்த வைத்தியமும் இல்லாமல் நிறைய பேருக்குக் குழந்தை கிடைச்சிருக்கு. மனசும் உடம்பும் சந்தோசமா இருந்தாத்தான் எல்லாம் நிறைவாக் கிடைக்கும்" மாமியாரின் அறிவுரை அவளுக்கு ஏனோ கசந்தது.

" நீங்கள் எல்லாரும் ஆறுதல் சொல்லலாம். ஆனால் அவரவர் இடத்தில இருந்தாத் தான் அவங்கட வேதினையும் துன்பமும் தெரியும்" என்று சொல்லி அடுத்தவர் அறிவுரைகளைக் கேட்காதவளாகத் தன்னைத் தானே தூரமாக்கி, தன்னைத் தானே புறக்கணித்தாள் அந்தப் பேதை.

'என்ர பிள்ளையோட கலியாணம் செய்ததுகள் எல்லாம் கையில ஒரு பிள்ளையும் வயித்தில ஒரு பிள்ளையுமா திரியேக்க என்ர பெத்த மனம் என்ன பாடு படுது? எத்தின கோயில்ல நேர்த்தி பரிகாரம்? அவனும் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக் கொண்டு திரிறான். எல்லாம் செய்தும் கையில பலன் இன்னும் கிட்டேல்ல'

'மாமி, உங்கட பிள்ளைக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. பிரச்சினையெல்லாம் எனக்குத் தான்; எனக்கும் குழந்தை பிறக்கும்.

எனக்கு அந்த நம்பிக்கையிருக்கு. கொஞ்சநாள் பொறுங்கோ. அப்பிடி உங்களுக்கு அவசரம் எண்டா உங்கட பிள்ளைக்கு வேற கல்யாணம் செய்து வையுங்கோ. எனக்குப் பிரச்சினையும் இல்லை' கதைகளுக்குப் பெரிதும் அலட்டிக்கொள்ளாதவளாகச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

"கீர்த்தி என்ன மாதிரி ஏதும் விசேசம்? டொக்ரர் ஆரிட்டயும் காட்டினியா? வயசு இருக்கெண்டிட்டு இப்பிடியே விடாதை"

"ஒண்டும் யோசிக்காதை, எல்லாத்துக்கும் காலமும் நேரமும் வரணும் .உனக்கும் கட்டாயம் குழந்தை பிறக்கும் நீ ஒண்டுக்கும் யோசிக்காதை"

இந்த வார்த்தைகள் கேட்டதும் பெரும் தவறிழைத்தவள் போல தலைகுனிந்து நடந்தாள்.

அவள் திரும்பும் திசையெல்லாம் நெருடல்கள். அவளின் இல்லாமையில்லை இயலாமை. அதை உரியவரிடம் சுட்டிக்காட்ட இந்தச் சமுதாயத்துக்கு ஏன் இத்தனை வன்மம்?

**அவள் திரும்பும் திசையெல்லாம் நெருடல்கள், அவளின் இல்லாமையில்லை இயலாமை. அதை உரியவரிடம் சுட்டிக்காட்ட இந்த சமுதாயத்துக்கு ஏன் இத்தனை வன்மம்?**

" கீர்த்தி நூறு பேர் ஆயிரம் விசயம் கதைப்பினம். இதையெல்லாம் நீ காதில போடாதை. உன்ர வாழ்க்கை நீ தான் வாழப் போறாய், அடுத்தவன் இல்லை .உன்ன நான் கல்யாணம் செய்தது காலம் முழுக்க உன்ன சந்தோசமாய் பாத்துக்கொள்ளத்தான், எங்களுக்கும் குழந்தை பிறக்கும் ,எனக்கு நம்பிக்கையிருக்கு .உனக்கு நான் இருக்கிறன்"

கணவரின் அத்தனை அன்பும் ஆதரவும் பெரும் பலம் அவளுக்கு.

++++++



நாள்கள் மெல்ல நகர்ந்தோட அவள் எண்ணிய அந்த நாளும் தள்ளிப்போனது.உலகின் அனைத்து சக்திகளும் அவள் கரம் கிடைத்ததைப் போல் பேருவகை. அவளுக்குத் தன்னைக் கேலி செய்தோர், தூரமாக விலக்கி வைத்தோர் முன்னால் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் என்று அத்தனை சந்தோசம். காலம் கடந்து வந்த கர்ப்பம் என்பதால் அவளுக்குப் பணிவிடை செய்ய உறவுகள் எல்லாம் போட்டிபோட்டனர். விரும்பியதை எல்லாம் மறுப்பின்றி அவள் கணவனும் செய்து கொடுத்தான்.நடைப் பயிற்சி, யோகா என்று அவள் மகாராணி போல பேணப்பட்டாள். இவை

சஞ்சீவி சிறுகதை

எல்லாம் அவளுக்கான சிறப்புரிமை இல்லையே. அவள் கையில் ஏந்த இருக்கும் அந்தப் பெரும் பொக்கிசத்தின் வருகைக்கானது.ஒட்டுமொத்தக் குடும்பத்தின் வேண்டுதலாகக் குழந்தை பிறந்தது."பிள்ளை அப்பிடியே தாயை உரிச்சு வைச்சிருக்கு. பொம்பிளப்பிள்ளை தாயைமாதிரி இருந்தா குடும்பத்துக்கு நல்லம்" என்றான் தாய்மாமன்.

"இல்லை அந்தக் கண்,வாய் எல்லாம் எங்கட அடி . அப்பப்பாமாதிரி பார்க்கிறாள். எங்கட அடிக்குத் தான் வளர வருவாள்" என்று தன் குலப்பெருமை பேசினான் சித்தப்பன்.

"தாய் மாமா மருகளுக்கு என்ன சீர்செய்யப் போறாய்? நாலு பவுணில நல்ல சங்கிலி போடு" என்று ஆஸ்பத்திரியில் குடும்பம் எல்லாம் சந்தோசத்தில் பெரும் ரகளை. கீர்த்திக்குத் தான் பெண்ணாகப் பிறந்ததன் உச்ச பயனை அடைந்துவிட்டதாக மமதை. தன்னை வாழ்த்த வந்தவர்களைச் சுற்றிப் பார்க்கிறாள்.

'நான் கேட்ட பெருவரம் கையில் வந்து சேர்வதற்குள் எத்தனை கேலிகள், எத்தனை உபதேசங்கள்? ஏதோ இறைவன் வரம் தர வரும்போது நடுவில் தான் இடைமறித்தது போல அடுத்தவர் எண்ணங்கள்.

கொண்டாட்டங்களில் கொஞ்சம் சிரித்தால் 'பிள்ளை பெறுவது பற்றி கவலையில்லை கொண்டாட்ட வீடு எல்லாம் திரிகிறாள்'என்பது.

தன்னைக் கொஞ்சம் அழகுபடுத்தினால் இப்பிடியே மேக்கப் போட்டால் "இந்தக் கண்ட கிரீம் மெல்லாம் போட்டு எப்பிடித் திரியுது பார்' என்பது.

அத்தனையும் அவளும் கடந்து வந்தாள். கீர்த்தி மட்டுமல்ல, அவளைப் போல இன்னும் பல பெண்கள் கடந்துவந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தோன் சேகவின் மூன்று ஆண்டுகள்

நா.நவராஜ்




யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை நூலகத்தில் ஒரு மூலையில் இருந்த புத்தக இறாக்கையில் இராமபாணங்கள் துளைக்கச் சரிந்துகிடந்தது அந்தப் புத்தகம். எடுத்துத் தட்டியபோது தூசுப்படலம் மேலெழுந்தது. முன்மட்டையில் எந்தவித எழுத்துகளும் இல்லை. உள்ளே புரட்டியபோது நைந்து தொங்கியநிலையில் 'யாழ். மாநகர சபையின் முக்கியமான அறிவித்தல், நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல் அழுக்குப்படிய விடல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்யவேண்டாம்என மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்...

நூலகப்பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்' என்றிருந்தது. துளைத்தல் செய்யவேண்டாம் என்ற குறிப்பு அதில் இல்லை. எனவே இராமபாணங்கள் அதில் துளையிட்டுத் தமது கைங்கரியங்களை நிறைவேற்றியிருந்தன. அதனால் தண்டப்பணத்தில் இருந்தும் அவற்றுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது போலும். துளைகளைத் தாண்டி நான் அடுத்த பக்கத்துக்குள் நுழைந்தேன். அந்தோன் சேகவ் (புத்தகத்தில் உள்ளது போலவே பெயர்களின் உச்சரிப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது) 'மூன்று ஆண்டுகள்'ராதுகா பதிப்பகம்,மாஸ்கோ. அ.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மொழிபெயர்த்தது ஓவியங்கள் ஸ்கவரோத்னிகவ் என்றிருந்தது.'மருத்துவம் எனது சட்டரீதியான மனைவி, இலக்கியம் எனது வைப்பாட்டி' எனக்குறிப்பிடும் சேகவ். நாடகத்திலும் சரி, சிறுகதைகளிலும் சரி இன்றுவரை ஆதர்சநாயகனாக விளங்குகின்றார். அவர் தனது கதைகளில் மனித உணர்வுகளை, உளநோய்க்கூறுகளை நுட்பமாகவும் கலைத்துவமாகவும் வெளிக்கொணர்ந்து அவற்றை எமது நெஞ்சில் நிறுத்தினார். தனிநபர் சார்ந்த உளவியலைத் தஸ்தாயெவ்ஸ்கியின் அளவிற்கு இல்லாதுவிட்டாலும் எமது உணர்வுகளுக்கு நெருக்கமாக எமது உணர்வுகளும் இந்தவாறே என உணரத்தக்கவகையில் படைப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். நகைச்சுவை உணர்வோடு கருத்துகளை முன்வைப்பதிலும் சமர்த்தர். இவரது எழுத்துலகப் பிரவேசம் பல்கலைக்கழக மாணவராக இருக்கும் போது நகைச்சுவைப் பத்திரிகைகளிலும் மற்றைய இதழ்களிலும் எழுதியதன் மூலமே நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. புத்தகத்தில் உள்ள குறிப்புகளின் அடிப்படையில் 'மூன்று ஆண்டுகள்' என்ற இந்த நாவலை 1894 சேகவ் எழுதினார். இது 1895இல் 'ருஸ்கயா மீஸில்'-(ருஷ்யச் சிந்தனை) என்ற பத்திரிகையின் முதல் இதழில் 'ஒரு கதை' என்ற துணைத்தலைப்போடு வெளியிடப்பட்டது. இந்நாவலின் கையெழுத்துப் பிரதியில் சேகவ் சுமார் இருநூறு குறிப்புகள் வரை எழுதி வைத்துள்ளார். அதன்படி அவர் இந்நாவலுக்கு 'மூன்று ஆண்டுகள்; குடும்ப வாழ்க்கையின் காட்சிகள்' என்ற தலைப்பையே முதலில் இட்டார் என்றும் பின்னர் அது 'மூன்று ஆண்டுகள்' என்றே நிலைத்துவிட்டது எனவும் அறியமுடிகின்றது..'சேகவ்'என்ற பெயர் தந்த காதலால் குற்றுயிராய்க் கிடந்த அந்தப்பிரதியை எடுத்துக் கொணர்ந்து தூசு நீக்கி வாசிக்கத்தொடங்கினேன். (இதன் புதிய பதிப்புத் தற்போது வந்துள்ளது.)

**மனித வாழ்வின் முக்கியமான கட்டமான திருமணத்தை அடிப்படையாக வைத்து அந்தத் தம்பதியினர் தமது திருமண வாழ்வின் பின்னர் மூன்றாண்டு வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சம்பவங்களை, மன உணர்வுகளை, உள்ளக முரண்பாடுகளைச் சொல்வதாகவே சேகவின் 'மூன்று ஆண்டுகள்' என்ற இந்த நாவல் அமைந்துள்ளது.**

இருமனங்களின் இணைப்பிலேயே தனது இலக்கை அடைகின்ற, எய்துகின்ற திருமணம், உலகில் உள்ள மனிதர்களின் வாழ்வியலில் முக்கியமான ஒரு கட்டமாகக் கருதப்படுகின்றது. இதனால் மனிதன் இருபிறப்பாளன் ஆகிறான். ஒவ்வொரு இனமரபுகளிலும் அவர்தம் பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்றவகையில் இது கடைப்பிடிக்கப்படுகின்றது. தமிழர் மரபிலும் 'இல்லறவியல்' முக்கியமானது. எண்வகை மணங்களைப் பற்றியும் அதற்குள் சிறந்தது காந்தர்வ மணம் என்றும் வாழ்வியலை அகம்சார்ந்தது புறம் சார்ந்தது என்றும் கற்பொழுக்கம் களவொழுக்கம் என்றும் ஒத்த தலைவனும் தலைவியும் ஒத்த அன்பினால் கூடும் கூட்டமே இன்பம் என்றும் அது பேசுகின்றது. அன்பு என்பது திருமணத்திற்கு அடிப்படையானது அதனைக் காதல் என்றும் குறிப்பிடலாம். மனதில் காதல் இருக்கும் பட்சத்திலேயே மனப்பொருத்தம் அமைகின்றது. எத்துணை இடர்கள் வந்தாலும் அது அவற்றையெல்லாம் எதிர்த்து இணைப்பைப் பலமாக்கி வாழ்வினை இன்பமுடையதாக மாற்றுகின்றது. இந்த மனப்பொருத்தம் எந்த இனக்குழுமத்துக்கும் பொருத்தமானதாக உலகப்பொதுமை உடையதாக இருக்கின்றது. ஒருவர் 'மேல்' இன்னொருவர் கீழ் என்ற உயர்வுதாழ்வுகளைத் தாண்டி சமத்துவமான உணர்வினால் இது கட்டமைக்கப்படுகின்றது. ஒத்த தலைவன், தலைவி என்பது இதுதான் போலும். இந்தச் சிந்தனை வழிநின்றே மேலைத்தேசம், கீழைத்தேசம் என்பன காதல் வழிமூலம் இதனை அடைவதை வலியுறுத்துகின்றது எனத்தோன்றுகின்றது. எமது தற்போதைய வாழ்வியலை அடிப்படையாகக்கொண்டு நோக்குகின்றபோது காதலில் தொடங்கிக் கல்யாணம் வரை செல்வதும், கல்யாணத்தில் தொடங்கிக் காதல் செய்வதும் என்ற இருநிலைகள் இருக்கின்றன. இது நிலைப்பதற்குக் காதல் அவசியம். எனினும் இதற்கும் அப்பால் பாற்கவர்ச்சியில் தொடங்கிப் பாலுறவில் நுழைந்து திருமணத்தில் இணைந்து தொடர்ந்து காதல் வளர்த்துச் செல்வதும் இருக்கின்றது. ஆக அன்பில், காதலில்தொடங்கித்திருமணத்தில் நுழைந்து பாலுறவு என்றும், திருமணத்தில் தொடங்கிப் பாலுறவில் நுழைந்து அன்பில், காதலில் மலர்தல் என்றும், பாலுறவில் தொடங்கித் திருமணத்தில் நுழைந்து காதலில் வாழ்தல் என்றும் இதனைப் பலவகையான சமன்பாடுகளாக மாற்றி நாம் சிந்திக்க முடியும். இவற்றில் எல்லாம் அன்பு அல்லது காதல் என்பது மலர்ந்துமனதில் ஆழப்பதிதல் என்பது நிகழ்ந்தால் மட்டுமே, இவை எல்லாம் நிலைபேறுடையதாக இருக்கும். அன்பு, காதல் என்பது வெறும் உடல் அளவில் நின்றுவிட்டால் மனப்பொருத்தம் இல்லாமல் அது தொடங்கிய வேகத்திலேயே முடிவுறும் அல்லது சமூகத்திற்காக, பிள்ளைகளுக்காக என்று வாழும் நிலையில் தொடர்ந்திடும். ஒரு கட்டத்தில் அதுவே பலருக்குப் பழக்கமாகியும் விடுகின்றது.


மனித வாழ்வின் முக்கியமான கட்டமான திருமணத்தை அடிப்படையாக வைத்து அந்தத் தம்பதியினர் தமது திருமண வாழ்வின் பின்னர் மூன்றாண்டு வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சம்பவங்களை, மன உணர்வுகளை, உள்ளக முரண்பாடுகளைச் சொல்வதாகவே சேகவின் 'மூன்று ஆண்டுகள்' என்ற இந்த நாவல் அமைந்துள்ளது. அத்தோடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் ருஷ்யாவின் அறிவு ஜீவிகள் மத்தியில் காணப்பட்ட சமூக முன்னேற்றம், வர்க்க ஏற்றத்தாழ்வை ஒழித்தல், கலையின் தூய்மைக்கும் காலத்தின் தேவைகளுக்குமிடையே உள்ள உறவுப்பொருத்தங்கள் போன்ற சித்தாந்த விவாதங்களையும் தன்னகத்தே இணைத்துப் பதினேழு அங்கங்களைக் கொண்டதாக அது கட்டமைக்கப்பட்டுள்ளது.

ருஷ்யாவின் மாஸ்கோவில் கதை நிகழ்கிறது, எனினும் மனிதர்கள் எல்லோருக்கும் பொதுமையாக இருக்கவேண்டிய காதலோடு கூடிய மனப்பொருத்தம் இன்மையால் இது எல்லைகளைக் கடந்து அனைவருக்கும் பொதுவான ஒரு நாவலாகத் தன்னை இனங்காட்டிநிற்கின்றது. நாவலில் முதன்மைப் பாத்திரங்களான லாப்தேவ் மற்றும் யூலியா ஆகிய இருவருக்கும் நடைபெறும் திருமணத்தைப் பற்றிக் சேகவ் குறிப்பிடும்போது 'இது காதல் திருமணமும் அல்ல, பாழாப் போன பணத்திற்காக நடந்த திருமணமும் அல்ல' என்கின்றார். பின்னர் எதற்காக நடைபெறுகின்றது பாற்கவர்ச்சிக்காகவா அல்லது பாலுறவிற்காகவா என்றால் அதுவும் இல்லைப்போலதான், நாவலை வாசிக்கும்போது தோன்று கின்றது. அன்பாயிருந்தாலும் பால்கவர்ச்சியாக இருந்தாலும் (அது இருவருக்கும் ஏற்படவேண்டும் இல்லை எனில் அது கைக்கிளையின் (ஒரு பக்க உறவு) பாற்படும்.) பணமும் வாழ்விற்கு இன்றியமையாததாகவே அமைந்துள்ளது. இன்று பணத்தை மையப்படுத்தியும் பல திருமணங்கள் நடைபெறுகின்றன. எனினும் பின்னர் அது அன்பு, பாலுறவு என இருமனம் ஒத்த நிலையை நோக்கி நகர்கின்றபோது தம்மைப் பலப்படுத்தி நிற்கின்றன.


(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



ப.சுகிர்தன்
தரம் - 9B
யா/வரணி மத்திய கல்லூரி




பி.அத்விகா
தரம் - 1F
யா/இந்து ஆரம்பப் பாடசாலை



எஸ்.ஷெரோன்
தரம் - 1
யா/சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை



து. கஜீந்
தரம் - 07
யா / கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்



மு.பூர்ணிகா
தரம் 3
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.



சி.சரன்ஜினி
தரம்- 9
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



பா.லதுர்ஷன்
தரம்- 9A
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# கிளியோபாட்ரா



1. எகிப்தின் இறுதி அரசியான கிளியோபாட்ரா உலக வரலாற்றில் வாழ்ந்த பிரபலமான ஓர் அரசியாவார்.
2. கி.மு. 69 இல் பிறந்த அவர், கி.மு. 30 இல் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
3. கிளியோபாட்ரா தனது 17 ஆவது வயதில் அரசியாக முடிசூட்டிக்கொண்டார்.
4. அவரால் 9 மொழிகளில் எழுத, படிக்க, பேசமுடியும்.
5. அவருக்கு பண்டைய எகிப்திய மொழி தெரியும்.
6. அவரது காலத்தில், எகிப்திய சித்திர எழுத்துகளைப் படிக்கத் தெரிந்த ஒரு சிலரில் கிளியோபாட்ராவும் ஒருவர்.
7. அவருக்கு பார்த்தியன், ஹிப்ரூ, மெடஸ், டிராகுலாடைட்டிஸ், சிரியன், எத்தியோப்பியன் மற்றும் அரபி மொழிகளில் சரளமாக எழுத, படிக்க, பேசத் தெரியும்.
8. இதுதவிர, அவர் உலக அரசியல், புவியியல், வரலாறு, வானியல், கணிதம், மருத்துவம், அல்கெமி எனப்படும் ரசவாதம் (தகரத்தைத் தங்கமாக்கும் வேதியியல்), விலங்கியல், பொருளாதாரம் எனப் பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவராக விளங்கினார்.
9. கிளியோபாட்ரா தனக்கென தனியாக ஒரு சோதனைச் சாலையை உருவாக்கி அதில் தனது ஆய்வுகளை நடத்திவந்தார்.
10. மூலிகைகள் அழகுக் குறிப்புகள் பற்றிய புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார்.
11. அப்புத்தகங்கள் புகழ்பெற்ற அலெக்சாண்டிரியா நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.
12. புகழ்பெற்ற ரோமானிய இயற்பியலாளர் கலன் கிளியோபாட்ராவின் மருத்துவக் குறிப்புகளை மொழிபெயர்ப்புச் செய்து வெளியிட்டுள்ளார்.
13. அறிவியல் மற்றும் மருத்துவம் குறித்த பல்வேறு ஆய்வுகள் செய்து அவற்றை அனைவருக்கும் பயன்தரும் வகையில் எழுதிவைத்த பேரழகி கிளியோபாட்ரா எகிப்தின் பேரரசியாக இருந்த தன் 39 ஆவது வயதில் இறந்துவிட்டார்.

# வழிகாட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org